ஓர் உலக வலம்

# பெருமானார் நபிகளைப் போற்றிய பெரியோர்கள்





தொகுப்பு:

இலங்கை தேசத்தின் கண் – தமிழ்மணி – தாஜுல் உலூம்

## மானா மக்கீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவற்ற அருளாளனும்
நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருநாமத்தால்....




முஹம்மது நபி அவர்கள் அனைத்துத்
தீர்க்கதரிசிகளையும்
மதப்பெரு மக்களையும் விட
மிகவும் வெற்றி வாய்ந்தவர்களாவார்கள்

—ஆங்கிலக் கலைக் களஞ்சியம்

Prophet Muhammed
was the most successful of all
Prophets and religious personalities.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமானார் நபிகளைப் போற்றிய பெரியோர்கள்

தொகுப்பாசிரியர்
தேசத்தின் கண் - தமிழ்மணி - தாஜுல் உலூம்
இலங்கை **மானா மக்கீன்**
பதிப்பாசிரியர்
நாவுக்கரசன் **எ.ஜி.ஏ.அஹமது றிஃபாய்**

கீழை மரக்காயர் பதிப்பகம்

## பதிப்பு விவரம்

| | | |
|---|---|---|
| ஆண்டு | : | ஹிஜ்ரி 1433 - ஜமாதுல் அவ்வல் - 10<br>கி.பி. 2012 - ஏப்ரல் 07. |
| மொழி | : | தமிழ் |
| பக்கங்கள் | : | 88 |
| உரிமை | : | பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களை விரும்புவோர் அனைவருக்கும் |
| ஒளி அச்சு | : | **N. இம்ரான், N. முஜீப்** |
| முகப்பு வடிவமைப்பு | : | மகப்பேறு மருத்துவர் **ஃபாத்திமா அஞ்சானா மக்கீன் பிரதீம்**<br>பொறியாளர் **அஸீம் அகமது மக்கீன்.** |
| அச்சகம் | : | கவிக்குயில் அச்சகம்<br>47, நல்லதம்பி தெரு,<br>திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. |
| பதிப்பகம் | : | 24/7, 3ஆவது தெரு<br>டாக்டர் திருமூர்த்தி நகர், சென்னை - 34<br>அலைபேசி : 98410 34520 |
| ஏக விநியோகம் | : | பஷாரத் பப்ளிஷர்ஸ்<br>அங்கப்பன் நாயக்கன் தெரு, மண்ணடி,<br>சென்னை - 600 001 ☎: 044 - 2522 5028 |
| விலை | : | ₹ 50.00 |

## ☛ இந்நூல்...

உலகளாவிய முஸ்லிம்களின் வழித்துணையாளராக வழிகாட்டியாகத் திகழும் ஒரு தீர்க்கதரிசி அவர்களை பிற மார்க்கங்களின் புத்திஜீவிகள், பெருந்தலைவர்கள், பேரறிஞர்கள் எவ்வாறு மலர்மாலைகள் சூடி மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதன் ஒரு பறவைப் பார்வை இந்நூல்.

இதற்கு முன்பும் இவ்வாறான சிறு நூல்கள் சில தமிழில் அறுபது ஆண்டுகளுக்கு முன்பேயே முன்னோடி இதழாளர், பன்னூலாசிரியர் பா.தாவூத்ஷா போன்றோரால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. 2001-ல் ரங்கூன் சுலைமான் அவர்களால்கூட ஒரு சிறு தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வகையில், என் பங்களிப்பையும் வழங்க விரும்பி ***கீழைத் தம்பி நாவுக்கரசன் ஏ.ஜி.ஏ. அகமது றிஃபாய்*** அவர்களிடம் யோசனை வைத்ததுமே எவ்வித் தயக்கமுமின்றி இசைவளித்து இலங்கை எழுத்தாணி இன்னும் உயர்ந்திடவும் பழம்பெரும் மரக்காயர் பதிப்பகம் மறுபடி துளிர்க்கவும் பேருதவிகள் புரிந்துள்ளார்.

அந்த வகையில் நன்றிப் பெருக்குடன் தங்கள் கரங்களில்...

07.04.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தோள்கொடுத்த துணைகள்...

புலவர். நவாப். அப்துல் மஜீது, (உலமா-) சென்னை - 83.

கவிஞர், தர்ஹா நகர் சபை (இலங்கை).

பல்துறை இலக்கியவாதி, தாழை மதியவன், பரங்கிப்பேட்டை.

சேவைச் செம்மல், ஆ-மான் ஆர்.எம்.நியாவுத்தீன், அம்மாப் பேட்டை.

வழக்கறிஞர், இலக்கிய ஆர்வலர் கு.மாரிமுத்து, புதுக்கோட்டை.

கணினியாளர், மலை விடார், கி.ஜெயந்திகுமார், சென்னை - 2.

### இதயம் பேசுகிறது...

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலத் துணைத் தலைவர், வடக்குக் கோட்டையார் வி.எம். செய்யது அஹமது அவர்கள், இத்தகைய ஒரு தொகுப்பு வரவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி என் அல்-கலத்திற்கு ஆசிகள் வழங்கியதை எண்ணி மகிழ்கின்றேன்; நன்றி பகர்கின்றேன்.

- மானா மக்கீன்.



### கீர்த்திமிகு கீழக்கரையின் மரைக்காயர் பதிப்பகம் மறுபடியும் தளிர்க்கிறது...!



- நூலாக்குநர்
ஊ.சி.மு. அஹமது ஜலாபாம்
[பதிப்பாசிரியர்]

நமது அன்றாட வாழ்க்கையில் பலரை ஒரு சில வினாடிகளில் ஒரு சில நிமிடங்களில் மறந்து விடலாம். மற்றவர்களையோ சில நாட்கள், சில மாதங்களில். ஆனால் பெரியார் அல்ஹாஜ் அத்தீக் மரைக்காயர் அவர்களையோ இஸ்லாமிய இலக்கியத்தையும் இஸ்லாமிய வரலாற்றையும் இரு கண்களாகக் கொண்டுள்ளோர் எந்தக் காலத்திலும் மறக்க முடியாது.

இலக்கிய ஆய்வாளராகவும், வரலாற்று ஆய்வாளராகவும், பன்மொழி ஆய்வாளராகவும் திகழ்ந்து நூலாசிரியராகவும் பதிப்பாளராகவும் விளங்கி அவைத்து இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளை முன்னின்று நடத்தி, இலக்கிய ஆட்டுக்குப் பல்வேறு அறக்கட்டளைகளை நிறுவி, சென்னைப் பல்கலைக்கழகத்தின் [illegible] ஆய்வு பண்பாட்டு மையத்தின் ஆலோசகராய் அமர்ந்து கீழக்கரையின் கீர்த்தியை நிலை நிறுத்தி, இலக்கியத் தொண்டையும் சமுதாயத் தொண்டையும் இருவிழிகளாகக் கொண்டு வாழ்ந்த அல்ஹாஜ் அத்தீக் மரைக்காயர் அவர்களுக்கு இஸ்லாமிய இலக்கியக் கழகம், இலங்கையுத் தமிழிலக்கியக் கழகம், கம்பன் கழகம் ஆகிய இலக்கிய அமைப்புகள் பாராட்டும் விருதும் வழங்கிப் பெருமைப்படுத்திக் கொண்டன.

1910 - மே - 10ல் பிறந்து, 1999 - நவம்பர் - 14வரை 90 அகவை வரை ஆனந்தமாக வாழ்ந்த அந்தப் பெரியவரிடம், ஆய்வாளரிடம், நிலைகளாலும் [illegible] என்று ஒன்று இருந்ததில்லை. தந்தை [illegible]. அவர் ஆனால் அவையாவர் மூத்தார் சிரிக்கும்! [illegible] என்பது அவர்கும் இருக்கும் தான்.

வாழ்க்கையில் [illegible] இருந்த காரணத்தால் முத்தின வணிகம், இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, வியட்நாம், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல நாடுகளிலும் பறந்து விரிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 ஆம் ஆண்டு வரை ரத்தின வணிகத்தில் ஈடுபட்டிருந்த **அல்ஹாஜ் இத்ரீஸ் மரக்காயர்** அவர்கள் அதற்குப் பிறகு நூல்கள் எழுதுவதிலும், எழுதுவிப்பதிலும், பதிப்பிப்பதிலும் ஈடுபடலானார்கள்.

### எழுதிய நூல்கள்

சென்னை மண்ணடி, 85-ம் இலக்கத் தம்பு செட்டித் தெருவில் உதயமானது **மரக்காயர் பதிப்பகம்!** ஆண்டு 1981.

முதல் நூலாக தமிழகத்தில் **'மார்க்கோ போலோ - இபுனுபதூதா'** வெளியானது. இந்நூல் பத்தாண்டு கால வரலாற்று ஆய்வின் பயனாக எழுதப்பட்ட ஒன்றாகும். அடுத்தடுத்து **'கீர்த்திமிகும் கீழக்கரை'**, **'நானிலம் போற்றும் நன்னகர்'**, **'நினைவு மலர்கள்'** ஆகிய நூல்கள் அவர்களால் எழுதப்பட்டு வெளியாகின.

### பதிப்பித்த நூல்கள்

**அல்ஹாஜ் இத்ரீஸ் மரக்காயர்** அவர்களின் முன்னோர்கள் எவ்வாறு இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் உருவாவதற்குப் பொருளீந்து உறுதுணை நின்றார்களோ அவ்வாறே அவர்களும், கால வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருந்த பல நூல்களை மறுபதிப்புச் செய்யத் தொடங்கினார்கள்.

**உமறுப்புலவர்** இயற்றிய **சீறாப்புராணம், வண்ணப் பரிமளப்** புலவரின் **ஆயிர மசலா, சேகாதி நெயினாப் புலவரின் திருமணக் காட்சி, தைக்கா சாஹிபு** அவர்களின் **ஷு அபுத்தீன் மாலைகள்-20, சூஃபி ஞானி செய்யிது ஆசியா உம்மாவின் மெய்ஞ்ஞானப் பாடல்கள், அப்துல் மஜீதுப்** புலவரின் **ஆசாரக்கோவை, கீர்த்தன மஜீது, செய்யிது அஹ்மது மரக்காயர்ப்** புலவரின் **நூறுநாமா, பீர்க்கான் புலவரின் அலிபாதுஷா காப்பியம்** ஆகியன அவர்களின் இலக்கிய அக்கறையினால் மறுபதிப்புச் செய்யப்பட்ட நூல்களாகும். இவற்றுள் பெரும்பாலான நூல்களைப் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றுச் செம்மையுடன் வெளிவரத் துணை செய்தவர் பதிப்புச் செம்மல் ஸையிது முஹம்மது ஹஸன் ஆவார்.

### எழுதுவித்த நூல்கள்

**'சீர்பெருகும் கீழக்கரை'**, **'சீதக்காதி திருமண வாழ்த்து'** ஆகிய இரண்டும் **அல்ஹாஜ் இத்ரீஸ் மரக்காயர்** அவர்கள் எழுதுவித்த நூல்களாகும். இவ்விரு நூல்களையும் எழுதியவர் **பேராசிரியர் மு.இ. அகமது மரைக்காயர்** ஆவார்.

ஆனால் அண்ணாரது மறைவில் அனைத்தும் அஸ்தமித்தன.

அந்த அஸ்தமிப்பிலிருந்து ஓர் உதயத்தை - ஒரு விடிவெள்ளியைக் காணக் கூடாதா, அது, அப்பெரியாருக்குப் பெரும் கௌரவத்தை வழங்குவதாக அமையலாமே என்ற எண்ணக் கனவுகள் மிகச் சாமான்யனான எனக்கும், இந்திய- இலங்கை உறவுப் பாலம், கீழையின் வீட்டுப் பிள்ளை, இலங்கை அரசின் பல தேசிய விருதுகளைப் பெற்ற **மானா மக்கீன்** காக்கா அவர்களுக்கும் ஏற்பட- ஹிஜ்ரி 1433, ஜமாதுல் அவ்வல் - பிறை 10 (ஏப்ரல் 07 - 2012) **கீழை மரக்காயர் பதிப்பகம்** மறுபடியும் துளிர்த்து, இத்ரீஸ் மரக்காயர் பெரியவர் அவர்களுக்கே



**அர்ப்பணிக்கப்பட்டு** சில பல நல்ல நூலாக்கங்களை வெளிக்கொணர இறையருளை நாடியுள்ளோம். இம் முயற்சி ஒரு நல்ல இலக்கியச் சேவையாளருக்கு நன்றிக்கடன் செலுத்துவதாகவும் அமையும் எனவும் நம்புகிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் — ஓர் எட்டு வரிக்கவிதையில்!

இவர்களே

## நபிகள் பெருமானார்!

எவரிலும் தாங்குகிற பொறுமையுற்ற மனமும்
எதிர்ப்பனைத்தும் வெல்லுகிற வீரமிகும் உணர்வும்
நீதியாக எப்போதும் நெஞ்சுகிற நேர்மை
நீதியையும் நெறிகளையும் கொண்டிருந்த தகவும்
வழியான களங்கமது கலையாத வாழ்வும்
வாய்த்து விட்ட செல்வமெல்லாம் இறைவழியில் செலவும்
அதுபோல சிறந்தநற் றலைமையுள்ள கீழும்
அருமை குணமும் அமைந்தவர்கள் நபிகள் பெருமானார்

— திருமதி சௌந்தரா கைலாசம்
[illegible]

நன்றி: 'சமரசம்' பத்திரிகை.





### ஓர் அரிய புதையல்!

### பேராசிரியர் அ.மார்க்ஸ் கண்டெடுத்தது

அன்றைய அநீதிகளையும் ஒடுக்கு முறைகளையும் எதிர்த்துப் போராடியவர் அந்த எளிய மனிதர். ஒரு சாதாரண ஒட்டக மேய்ப்பராக வாழ்வைத் தொடங்கி உலகை மாற்றியவர்.

யாரும் அணுகத்தக்க மிக எளிய மனிதராக முஹம்மது வாழ்ந்தார். இறைத்தூதர் என்பது தவிர வேறு அலங்கார மொழிகளையோ, மரியாதை விளிப்புகளையோ, புகழ்ச்சிகளையோ அவர் கோரியது இல்லை.

மசூதியிலும் மரத்தடிகளிலும் சாதாரண மக்களுடன் அவர் சேர்ந்து அமர்ந்து உரையாடியிருக்கும் காட்சிகள் அவரது வரலாற்றில் ஏராளமாக உண்டு.

குழந்தைகளிடம் மிக்க அன்பு கொண்டவராயிருந்தார் அவர்.

பிராணிகளிடம் அவர் காட்டிய கருணை குறிப்பிடத்தக்கது. பிராணிகள் மீது சூட்டுக் கோலால் அடையாளக் குறியிடுவது, கழுத்தை இறுக்கி வளையங்கள் மாட்டுவது, மிருகங்களைச் சண்டையிட்டு வேடிக்கை பார்ப்பது முதலியவற்றை அவர் தடை செய்தார்.

நபிகள் நாயகம் மனுடம் போற்றுகிற ஓர் இறைத்தூதராக விளங்கிய போதிலும் மிகவும் சாதாரணமான மனிதப் பண்புகளும் உணர்ச்சிகளும் நிறைந்த ஓர் எளிய மனிதராக நம்மிடையே வாழ்ந்த ஒரு வரலாற்று நாயகர்.

எந்த அதிசயத்தையும் நிகழ்த்திக் காட்டாமல் தமது ஏக இறைக் கொள்கையை முன்வைத்து கடும் எதிர்ப்புகள் கொலை முயற்சிகள் மத்தியில் கொள்கை அடிப்படையில் மக்களைத் திரட்டியவர் நபிகள்.

தான் ஒருவனே இறைத்தூதர் எனவும் நபிகள் உரிமை கொண்டாடியதில்லை. திருக்குர்ஆனும் அப்படிக் கூறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இஸ்லாமிய மரபுப்படி முஹம்மதுக்கு முன்பாக 1,24,000 இறைத் தூதர்கள் இருந்துள்ளனர். எண்ணிக்கையில் அடங்காதவர்கள் என்பதன் குறியீடே இந்த இலக்கம்.

யூதர்களும் கிறிஸ்தவர்களும் வணங்குகிற மோஸஸையும் (மூஸா) ஏசு (ஈசா)வையும் கூட நபிகளாக ஏற்றுக் கொண்டது திருக்குர் ஆன். பழைய நபிகளையும் அவர்கள் நிறுவிய புதிய மதங்களையும் மறுப்பதற்காகவோ அழிப்பதற்காகவோ தான் வந்துள்ளதாகவும் முஹம்மது நபிகள் கூறியதில்லை (2:128-132, 61:6)

—2004இல் 'கறுப்புப் பிரதிகள்' திரு நீலகண்டன் அவர்களாலும், 2008இல் ஜனாப் அமானுல்லா அவர்களாலும் பதிப்பிக்கப்பட்ட 'நான் புரிந்துகொண்ட நபிகள்' நூலின் பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்கள் வழங்கியுள்ள ஆய்வுத் தகவல்களின் சில பகுதிகள் ஆசிரியரது அனுமதி பெற்று இந்நூலின் அறிமுக முன்னீடாக இடம் பெற்றுள்ளன.

நன்றி.





# பூ மழை!

● 'இறைவனுக்கு அஞ்சி நடக்க முயன்ற இலட்சோப லட்சம் மனிதர்களுள் ஒருவராய் நபிகள் நாயகம் விளங்கினார். ஏழையாகவே அவர் மரித்தார். தமது சடலம் புதைக்கப்படும் இடத்தில் ஒரு மாபெரும் மண்டபம் எழுப்பிட வேண்டும் என்று அவர் விரும்பியதே இல்லை. தமக்குக் கடன் ஈந்தவர்களில் ஒருவரையேனும் அவர் தமது மரணப் படுக்கையில் மறந்ததில்லை'.

–தேசப்பிதா மகாத்மா காந்தியின்
மலர்க்கிரீடம் 15 ஆம் பக்கத்தில்

● 'ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற ஒப்பரிய கொள்கையே உலகளாவிய கொள்கையாகும். நபிகள் நாயகம் அவர்கள் குறுகிய காலத்திலேயே அக்கொள்கைகளை உலகில் பரப்பி வெற்றி பெற்றது மனிதர்களைச் சிந்திக்க வைக்கும் மகத்தான அற்புதமாகும்'.

பேரறிஞர் அண்ணாவின் அல்லிப் பூக்கள் 20ஆம் பக்கத்தில்

● முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மகா சுந்தர புருஷர், மகாசூரர், மகா ஞானி, மகா பண்டிதர், மகா பக்தர், மகா லௌகீக தந்திரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரமானாலும், யுத்தமானாலும் நபி கவனித்தால் அந்த விஷயத்தில் வெற்றி மிகவும் உறுதி. ஆதலால் அவர் மிகவும் அபிமானிக்கப்பட்டார்.

–முண்டாசுக்கவிஞர் பாரதியார் போர்த்திய பொன்னாடை 25 ஆம் பக்கம்

● தீர்க்கதரிசி என்றால் பின்னால் வருவதை முன்னால் அறிபவர் என்றாகும். நபி என்றால் இறைவனுடைய திருத்தூதர் என்றாகும். எத்தனையோ தீர்க்கதரிசிகள் நபிமார்கள் உலகத்தில் தோன்றினார்கள் என்று எல்லாச் சமயத்தினரும் கூறுகிறார்கள். ஆனால் தீர்க்கதரிசி என்ற சொல்லுக்கு உரியவர் நம்முடைய நபிகள் நாயகம் ஒருவர்தான். இது என்னுடைய முடிவு.

–கவிக்குயில் சரோஜினி தேவி வழங்கிய கனகாம்பரத்திற்கு 43 ஆம் பக்கம் செல்க

● நான் அந்த அற்புத மனிதரின் வாழ்க்கையைப் படித்தேன். அவர் மனித இனத்தை அழிவிலிருந்தும் காப்பாற்றப் போந்தவர் என்பது என் கருத்து. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இன்று நம்மிடையே இருப்பாரானால் மானிட நாகரிகத்தையே அழித்திட முனைந்திருக்கும் பிரச்சனைகள் அனைத்திற்கும் தீர்வு காண்பதில் வெற்றி கண்டிருப்பார்.

–ஆங்கில நாடகாசிரியர் ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவின் சந்தன மாலை 49ஆம் பக்கத்தில்

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீடு, வாழ்வு முறை அனைத்தும் சர்வ சாதாரண எளிய மக்களின் வாழ்க்கை போன்றிருந்தது. அவர்களது உணவு கோதுமை ரொட்டியும், தண்ணீருந்தான். தன் கையினாலேயே ஒட்டுப் போட்டுத் தைத்த சட்டை அணிந்த மனிதருக்கு மக்கள் கீழ்ப்படிந்தது போல் வலிமை மிகுந்த எந்த மாமன்னனுக்கும் மக்கள் கீழ்ப்படிந்ததில்லை.



–ஆங்கில நாவலர் தாமஸ் கார்லைல் புகழாரத்தின் முழு அழகும் 51 ஆம் பக்கம்

## மேற்கண்டவர்களுடன் பின் காணப்படும் பெருந்தகைகளும் பூமழை பொழிந்துள்ளனர்.

ஸ்ரீ ஜவஹர்லால் நேரு – பக்கம் 17

தவத்திரு குன்றக்குடி அடிகளார் – பக்கம் 37

ஸ்ரீலஸ்ரீ மதுரை ஆதீனகர்த்தா – பக்கம் 39

டாக்டர் பத்மஸ்ரீ நல்- குப்புசாமி – பக்கம் 41

சிந்துப் பேரறிஞர் வாஸ்வானி – பக்கம் 47

வரலாற்றாசிரியர் வில்-யம் முய்ர் – பக்கம் 59

பன்னூலாசிரியர் எட்வர்ட் இப்பன் – பக்கம் 61

மைக்கல் ஹெச். ஹார்ட் – பக்கம் 63

ரெவரண்ட் டாக்டர் மார்க்கஸ்டாஸ் – பக்கம் 67

ரெவரண்ட் ஸ்டீபன்ஸ் – பக்கம் 69

## இவர்களுடன் இன்னும் சிலரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசப்பிதா மகாத்மாவின் மலர்க் கிரீடம்

மேல்நாடுகள் அந்தகாரத்தில் ஆழ்ந்திருந்த சமயத்தில் கீழ்நாட்டில் மிகவும் ஒளிமிக்க விண் மீனொன்று உதயமாகி, உலகத்துக்கு அறிவுச் சுடரையும், ஆற்றலையும் அளித்தது.

நபி பெருமானார் அவர்களின் உறுதியான எளிய வாழ்க்கையையும்,வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் அவர்களுக்கு இருந்து வந்த மட்டிலடங்கா ஆர்வமும், அவர்களைப் போற்றியவர்களிடமும், நண்பர் களிடமும் அவர்களுக்கிருந்த அளவு கடந்த பக்தி விசுவாசமும், அவர்களின் வீரமும், மனோ உறுதியும், தங்கள் தூதிலும் ஆண்டவனிடத்தும் அவர்களுக்கிருந்த பூரண நம்பிக்கை யுமே இஸ்லாத்தை உன்னதப் பதவிக்கு உயர்த்தின.

இஸ்லாம் எப்படிப்பட்ட மார்க்கமென்பதை அறிய இந்துக்கள் பயபக்தியுடன் முயற்சி எடுக்கக்கடவர்.

அவ்வாறு அவர்கள் முயலுவார்களானால், என்னைவிட அதிகம் அவர்கள் இஸ்லாத்தை நேசிப்பார்கள்.,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெரும் தீர்க்கதரிசி!

நபிகள் நாயகம் பெரிய தீர்க்கதரிசி. அவர்கள் அன்று அனுபவித்த துன்பங்களை நான் படித்த காலை கண்ணீர் வடித்தேன்.

### நல் முன்னோடி!

ஒரு மகத்தான லட்சியம் வைத்திருப்பவன் அதை எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள் என்று கவலைப்பட மாட்டான். திரளான நபர்கள் முஹம்மது நபியை விரட்டிக் சென்ற போது, அவருடன் ஓடிய சீடர் அபூபக்கர் நடுங்கினார். ''இத்தனை பேரை எதிர்த்து நாம் இருவர் என்ன செய்ய முடியும்?'' என்றார் அபூபக்கர். "இல்லை, நாம் மூவர் இருக்கிறோம் - நம்முடன் கடவுள் இருக்கிறார்.'' என்று பதில் அளித்தார் நபிகள் நாயகம்.

(''கவலைப்படாதீர், நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்!'' - குர்ஆன் 9 :40)

திருநபி (ஸல்) அவர்களும், ஹஸ்ரத், உமர் (ரலி) அவர்களும் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்களுடைய விஷயத்தில் எப்படிப்பட்ட கருத்து வேற்றுமைக்கும் இடம் இல்லை. அவர்களுடைய காலடியின் கீழ் உலகச் செல்வம் குவிந்து கிடந்தது. அவர்கள் எப்படிப்பட்ட சிரமங்களைச் சகித்தார்களோ அந்த வகையில் உலக வரலாற்றிலே அவர்களுக்கு ஈடான மற்றொருவர் கிடைப்பது மிக மிக அரிது.

ஆட்சி புரிய அமைச்சர்கள் நபி பெருமான் வகுத்த சீர்திருத்தங்களைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

-"Young India" 11.09.1924





## மாமேரு நேருஜியின் ஒற்றை ரோஜா

''முகம்மது நபியின் வெற்றிக்கு முதலாவது காரணம், அவர்கள் கொண்டிருந்த உறுதியும் ஊக்கமும் ஆகும். இரண்டாவது காரணம், இஸ்லாம் போதிக்கும் சமத்துவம் சகோதரத்துவம் ஆகும்

''அனாதையாகவும் மிகச் சாதாரணமானவராகவும் வாழ்ந்த முஹம்மத், தனது கொள்கைதான் சிறந்தது எனவும், அதை ஏற்றுக்கொண்டு வாழ்வதில்தான் சிறப்பு இருக்கின்றதெனவும் வலியுறுத்தி பன்னாட்டு அதிபதிகளுக்கெல்லாம் நேர்முக அழைப்பு விடுத்ததானது வேறு எவராலும் செய்ய முடியாத மிகத் துணிவான நடவடிக்கையாகும்.''

- ஜவஹர்லால் நேரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரியார் ஈ.வெ.ரா புகழ் மாலை!

திரு முகமது நபியைப் பற்றி யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் நான் அவரை ஒரு மனிதர் என்றும் மனிதரைப் போலவே தாயும் தகப்பனும் கூடிக்கருத்தரித்துப் பிறந்தவர் என்றும் கருதித் தான் அவரால் செய்யப்பட்டதாகச் சொல்லும் விஷயங்களில் அனேகத்தை நான் புகழ்கிறேன். அதற்காகவே அவரையும் நான் பாராட்டுகிறேன். அப்படிச் சொல்லப்படு பவைகளே அந்த மார்க்கத்துக்கு ஒரு பெருமை என்றும் நினைக்கிறேன். ஆனால் மற்ற மதத்துக்காரர்களோ தங்கள் மதத்தலைவரை ஒரு மனிதர் என்றாலே கோபித்துக்கொள் கிறார்கள். கழுதை. நாய். குதிரை இவற்றினுடைய வயிற்றில் இருந்து பிறந்தவர் என்றாலும் ஒப்புக்கொள்கிறார்கள்.

*- 25.07.1931 சாத்தான்குளம் சொற்பொழிவு*

## நபிகள் நினைவு வரவேண்டும்

நம்மில் சிலர் நம் கொள்கைகளைப் பரப்ப அதைரியம் ஏற்படுகிற நேரத்தில் அவர்களுக்கு நபிகள் நாயகத்தினுடைய நினைவு வரவேண்டும்.

ஆரம்ப காலத்திலேயே முகம்மது நபியினுடைய கொள்கைகளை அங்குள்ள மக்கள் இலகுவிலே ஏற்றுக் கொண்டார்களா என்றால் இல்லை. அரேபிய பாலைவனத் திலே வசித்த மக்கள் 360 உருவங்களை ஆண்டவர்களாக வைத்து ஒரு நாளைக்கு ஒன்றாக வணங்கி வந்தனர் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட மக்களிடம் நபிகள் நாயகம் அவர்கள் 360 உருவங்களும் ஆண்டவனல்ல என்று எடுத்துச் செல்ல எப்படிப்பட்ட ஆற்றல் படைத்தவராக இருந்திருக்க வேண்டும்; எப்படிப்பட்ட ஆபத்துக்களையெல்லாம் அவர் ஏற்றிருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்தால் நமக்கும் சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதிலே ஏற்படக்கூடிய பயம் ஓரளவு நீங்கும்.

பொது வாழ்விலே ஏற்படும் சந்தேகங்களெல்லாம் நபிகளை நினைத்தால் பறக்கும். அவர் காலத்தில் ஏற்பட்ட ஆபத்துக்களை நினைத்தால் இக்காலத்து ஆபத்துக்கள் வெறும் துரும்புக்குச் சமானம் ஆகும்.

நபிகள் நாயகம் அவர்களுடைய வரலாறு வீரத்துக்கு ஒரு ஊற்று! சமுதாயத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு !

மனித சமுதாயத்தின் எல்லா வாழ்வுத்துறைத் தன்மைகள் பற்றியும் உயர்ந்த தத்துவங்கள் கொண்ட கோட்பாடுகளைச் சொல்லி விட்டார் நபி அவர்கள்.

*- சென்னை, ராயபுரம் மீலாத் விழாவில்*
*- 20.12.1953-ல் சொற்பொழிவு*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேறிஞர் அண்ணாவின் அல்லிப்பூக்கள்

நான் வசிக்கும் காஞ்சிபுரம் ஒலி முகம்மது பேட்டை இஸ்லாமிய நண்பர்களுடனும், ஆலிம்களுடனும் என் இளமை முதல் தொடர்பு கொண்டவன்.

இங்கு, உற்ற நண்பர்கள் என்கிற போழ்து, குடும்பதோடு குடும்பமாய்க் கலந்து - சகோதர வாழ்க்கை நடத்தியவன் நான். இஸ்லாத்தைப் பற்றியும் அதன் இன்னிலக்கியமான, இறைமறை திருக்குர்ஆனைப் பற்றியும் நான் அறிந்து கொள்ளும் வாய்ப்பு, என் இளமைக் காலத்திலேயே என் இதயத்தில் இடம் பிடித்து விட்டது. திருக்குறளை நான் தெரிந்து கொண்ட காலத்திலேயே திருக்குர்ஆனையும் புரிந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றிருந்தேன் என்று நான் துணிந்து சொல்வதில் பெருமை கொள்கிறேன்.

என்னுடைய பொதுவாழ்வு சுடர்விட என்னுடைய இதயமூச்சின் இலட்சிய மேடையான திராவிடக் கழக மேடையுடன், நபிகள் நாயக மீலாது மேடையும் எனக்கு கைகொடுத்ததை நான் மறந்து விட முடியாது.

ஏறத்தாழ மூந்நூற்றுக்கதிகமான மீலாது மேடைகளில் நான் பேசியிருக்கிறேன்.



நானும்-எனது கொள்கையும், சொல்லிவந்த- சமுதாய சீர்திருத்த பிரச்சார பலத்துக்கு-பெருமான் நபிகள் நாயகத்தின் ஏக தெய்வக் கொள்கை எங்கட்குப் பெரிதும் பிரச்சாரத் துணை நின்றது.

கல்லையும் மண்ணையும் பூசிக்காதீர்; கடவுளால் படைக்கப் பட்ட மனிதன் உண்டு - மனிதனால் படைக்கப்பட்ட கடவுள் இல்லை என்று நபிகள் நாயகம் வலியுறுத்திய அதே கொள்கையைக் கொண்டிருந்த - எங்கள் இலட்சியப்பணி மீலாது மேடையின் மூலம் - சுடர்விட நல்ல வாய்ப்பு இருந்தது.

## ஒரே இறை - ஒரே மறை

1400 ஆண்டுகட்கு முன்பு எந்தவித நவயுக பிரச்சார சாதனமும் இல்லாத அந்த நாட்களில் - திரும்பும் திசைதோறும் கடவுளின் சிலை வடித்து தினமொரு இறைவனை வணங்கிய அறிவாற்றலற்ற அந்த மக்களை - நபிகள் நாயகத்தின் 23 வருட பிரச்சார பலம், எத்துணை வெற்றிக்கு இழுத்து வந்து, ஒரே இறை - ஒரே மறை என்ற கருத்தை உள்ளத்தால் ஒத்துக் கொள்ளச் செய்து அதுவும் உலகில் மூலை முடுக்கெல்லாம் பரவி பண்புடன் வாழச் செய்திருக்கிறது என்றால் - அந்த மனிதப் புனிதரின் நாவண்மைக்கிருந்த நல்ல மகத்துவத்தை எண்ணிப் பூரித்து நன்னயத்திற்கு துணைபோக வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இத்தனை மகத்துவம் அந்த மாநபிக்கு இருக்கும் காரணமே அந்தப் பெருமகன் தன் உயிரினும் மேலாக கட்டிக் காத்துவந்த பொறுமையும், சொல்லும், செயலும் இணைந்த வாழ்வும் - நடைமுறை வாழ்க்கையில் தடையின்றிச் செல்லத் துணை நின்ற சட்டமும், தன்னையும் தன்னை பின்பற்றுவோருள் ஒருவராக்கி சொன்னதோடல்லாமல் செய்துகாட்டும் செம்மலாகவே இருந்ததும் மூல முதல் காரணமாகும் !

## மிகப் பெருந் தூண்டுகோல்

நபிகள் நாயகத்தின் வாழ்வும் வாக்கும் நிரம்பிய ஹதீதும் இஸ்லாத்தின் இணையற்ற இலட்சியப் பொக்கிஷமான -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமறை திருக்குர்ஆனும் மனிதன் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் நடைமுறை வழிகளைக் கடைப்பிடிக்க வலியுறுத்துகின்றன. இது இஸ்லாத்தின் வளர்ச்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய தூண்டுகோலாகும் !

வாளேந்தி, வன்சமர்புரிந்து சாதிக்க முடியாத சாதனைகளைக் கூட நபிகள் பிரானின் இன்சொல்லும், புன்முறுவலும் தனக்கே உரிய தனித்து ஆயுதமான பொறுமையினாலும் வெற்றி கொண்டு இருக்கிற சக்தி அண்ணலின் பால் எனக்கு அளப்பரிய பக்தியை உண்டாக்கிவிட்டது.

பெருமான் நபிகள் இஸ்லாத்தின் இனிய சங்க நாதத்தை உலகின் நாலா பக்கமும் ஒலிக்கச் செய்வதற்குப்பட்ட துயர்கள், தொட்ட தொல்லைகள், தியாகம் பலகண்ட தியாகத் தழும்புகள் கொஞ்சம் நஞ்சமல்ல.

அண்ணல் நபிகள் நாயகத்தின் அறப்பணி - அகிலத்தை தரமுடையதாக்கவும் திறமுடையதாக்கவும் கிடைத்த திருப்பணி இப்பணியை எண்ணி பூரிக்க நாம் ஒவ்வொருவரும் கடைமைப்பட்டவர்களாவோம்.

முகம்மது நபி மார்க்கத்தை உண்டாக்கியது மட்டுமல்ல, குருட்டு நம்பிக்கையிலே சிக்கிக் கிடந்தவர்களை விடுவித்துக் காப்பாற்றி, நல்லதொரு சமுதாயத்தையும் உருவாக்கினார். அதற்கான ஒரு நல்ல அரசியலையும் ஏற்படுத்தினார். மிகுந்த நெருக்கடியான ஆபத்தான காலத்திலேயே வெற்றிகரமாக தமது இலட்சியங்களை நிறைவேற்றிக் காட்டினார்.

இந்தக் காலத்தில் நல்ல கொள்கைகளை எடுத்துச் சொல்ல அதிகத் தைரியம் தேவையில்லை. நபிகள் நாயகம் அவர்களுடைய காலத்தில் சொல்ல வேண்டுமானால், நெஞ்சுரம் அதிகம் தேவையாக இருந்தது! அதைச் செய்து நல்ல ஒளியைத் தந்தார் முஹம்மது நபி.



## உபதேசப்படி நடக்க வேண்டும்

மார்க்கத் துறையிலுள்ள தூய கருத்துக்கள் சரியான வழியில் சரியான நோக்கத்தில் பரப்பப்பட்ட வேண்டும்.

கருத்தை உபதேசிப்பவர்கள் உபதேசித்தபடி நடந்து காட்ட வேண்டும். உபதேசிக்க என்று ஒரு கூட்டம், உபதேசித்தபடி நடப்பதற்கென்று ஒரு கூட்டம் இருக்கக் கூடாது.

சொல்லியபடி நடக்கிறேன் என்று நபிகள் நாயகம் நடந்து காட்டினார். அப்படி மற்றவர்களும் நடந்து காட்டினால்தான் உலகத்தில் சாந்தி சமாதானம் சமரசம் எல்லாம் நிலவும்.

நபிகள் நாயகத்தின் போதனைகளில் ஒன்று ''ஆண்டவனுக்கு இணை வைத்தல் ஆகாது'' என்பதாகும்.

இந்தப் போதனையை நான் நெஞ்சம் நெக்குருக நெக்குருக எண்ணிப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன்.

ஆண்டவனுக்கு இணைவைத்தல் ஆகாது - ஏன் இணை வைத்தல் ஆகாது? ஆண்டவன் எப்படி இருக்கக்கூடும்? என்றெல்லாம் சிந்தனைக்கு வேலை கொடுத்து ஆண்டவன் இப்படியிருக்கக் கூடும் என்று சிந்தனை முடிவடைவதில்லை.

எனவேதான், பழந்தமிழ் மக்கள் ''கண்டவர் விண்டிலர், விண்டிவர் கண்டிலர் பார்த்தவர் சொன்னதில்லை.சொன்னவர் பார்த்ததில்லை'' என்று கூறியிருக்கிறார்கள்.

## நபிகள் கொடுத்த நெஞ்சுரம்

இஸ்லாத்தின் ஒரு சிறப்பு, இஸ்லாத்தில் யார் சேர்ந்தாலும் சாதியை மறைத்து விடுகிறது.

நபிகள் நாயகத்தை மகான் என்று ஏன் கொண்டாடுகிறார்கள் என்றால், 1400 ஆண்டுகளுக்கு முன்பு பல்வேறு தெய்வங்களை வணங்கிய மக்களிடம், ''நீ வணங்கும் கடவுள் இதுவல்ல, நீ செல்லவேண்டிய கோயில் இதுவல்ல'' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கொள்கையை நெஞ்சுறுதியோடு எடுத்துச் சொன்னதே அவரை மகான் என்ற கொண்டாடக் காரணம்.

அவரைப் போன்ற மகான்கள் நம்மிடையே அடிக்கடி தோன்றுவதில்லை.

அத்தகையவரின் சிறந்த கருத்துக்களை நாட்டில் பரப்ப நல்ல சுற்றுச் சார்புகள் உருவாக வேண்டும். சுற்றுச் சார்பு நல்லமுறையில் அமைய மக்களிடத்திலே நல்ல அறிவுத் தெளிவும், அத்தெளிவு ஏற்பட நல்ல கல்வி முறை ஏற்பட நல்ல ஆட்சியும், நல்ல ஆட்சி முறை ஏற்படுவதற்கு நல்ல ஆட்சியாளர்களும் வேண்டும். நல்ல ஆட்சியாளர்களை ஏற்படுத்த நல்லவர்களை வாழவிட வேண்டும். நபிகள் போதித்த இஸ்லாம் மார்க்கம் வைரம் போன்றது.நல்ல வைரத்தைப் பட்டை தீட்டி அதைக் கையிலே மோதிரமாகவும் செய்து போட்டுக் கொள்ளலாம். காதில் கடுக்கனாகவும் அணிந்து கொள்ளலாம். அந்தப் பயனின் தரத்தை அறிந்து கொள்ள முடியும்.

***- தஞ்சாவூர், அபிவிர்த்திவஸ்ரத்தில் 21.08.1966ல் நிகழ்ந்த நபிகள் பிறந்ததின வழாவில் அண்ணா அவர்களது உரைத் தொகுப்பு.***

<u>நன்றிக்குரிய அடிக்குறிப்பு !</u>

மேலே எனது அபிமானிகள் படித்தின்புற்ற பேரறிஞர் அண்ணா ஆற்றிய பேருரைகள், 1980 - ஆம் ஆண்டில் 'அண்ணல் நபி பற்றி அறிஞர் அண்ணா' என்ற தலைப்பில் முதுபெரும் எழுத்தாளர், ***பன்னூலாசிரியர் ஜே.எம். சாலி*** தொகுத்தவற்றின் ஒரு பகுதி மட்டுமே.





# 'முண்டாசுக்கவிஞர்' போர்த்தும் பொன்னாடை

எனக்கு முதல் முதல் இஸ்லாம் மார்க்கத்திலே அன்புண்டானதின் காரணம் பின்வருமாறு :

மக்கா நகரத்தில், பூஜாரிகளின் ஸபை கூடியிருக்கிறது. பிரமாண்டமான ஸபை. நாட்டிலுள்ள பூஜாரிகள் அத்தனை பேரும் சேர்ந்து கூடும் வருஷாந்தரக் கூட்டம் திருவிழாக் காலத்தை ஒட்டி நடந்தது.

இவர்களுடைய வைதீகக் கோஷ்டியின் ஸபைக்கு நடுவே முஹம்மது நபி எழுந்து நின்று சொல்கிறார் :

''நான் அல்லாவை நேரே பார்த்திருக்கிறேன். அவர் என்னைத் தமது முக்கிய பக்தராகவும் பிரிதிநிதியாகவும் நியமனம் செய்திருக்கிறார். நீங்கள் இனிமேல் அவரைத் தொழுங்கள் அவரை மாத்திரம் தொழுதால் போதும். கடவுள் ஒருவர்தான் இருக்கிறார். பல ஈசுவரர் இல்லை. ஈசனைத் தவிர ஈசன் வேறில்லை, லா இலாஹ இல்லல்லா. அல்லாவைத் தவிர வேறு அல்லா கிடையாது.'' (அரபி பாஷையில் அல்லா என்ற பதத்திற்கு கடவுள் என்று அர்த்தம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபிக்குப் பரிகாசம்

இதைக் கேட்ட மாத்திரத்தில் அங்கிருந்த பெருச்சாளிக் குருக்களெல்லோரும் தங்கள் சிஷ்யர்கள் சூழ முஹம்மது நபியைப் பரிஹாஸம் பண்ணினார்கள்.

அந்தச் சமயத்தில் முஹம்மது நபி (ஸல்லல்லாஹுˆ அலைஹி வஸல்லம் ) அவர்கள் மருமகனாகிய அலி என்பவர் எழுந்து, ''மாமா உங்கள் கொள்கையை யார் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, நான் நம்புகிறேன் லா இலாஹ இல்லல்லா முகம்மதுர் ரஜூல் உல்லா. அல்லாவைத் தவிர வேறு கடவுளில்லை. அவருக்குச் சிறந்த நபி முஹம்மது'' என்று பிரதிக்கினை செய்து கொடுத்தார்.

இது ஒரு செய்தி.

இரண்டாவது செய்தி: முஹம்மது நபியைத் தமது குமாஸ்தாவாகப் பல வருஷம் வைத்திருந்த பிறகு அவருக்கு மாலையிட்டவராகிய கதீஜா பீவியம்மை அவருடைய மதத்தில் சேர்ந்து கொண்டது.

இடையிடையே நான் என் மனத்திற்குள் முஹம்மது நபி (ஸல்லல்லாஹுˆ அலைஹி வஸல்லம்) அவர்களைப் பற்றிச் சித்திரம் போட்டுப் பார்ப்பது வழக்கம்.

நடுப் பாலைவனத்தில், நள்ளிரவிலே தனி மணல் வெளியிலே, ஒட்டகையின் மீது தனியாக ஏறிக் கொண்டு போகிறார். அல்லது, அங்கொரு குன்றின் மேல் ஏறி நிற்கிறார். நெடுங்காலத்துப் பக்தியாலும், நிகரற்ற அன்பினாலும், ஞானத்தினாலும் பக்குவப்பட்ட இவருடைய ஹிருதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாவை நாடுகிறது. வேறு நினைப்புக்கு இடமில்லை. அப்போது அங்கு ஞானவொளி வீசிற்று. நபி அல்லாவைக் கண்டார். சுகப்பிரம்ம ரிஷிக்கு நேர்ந்த அனுபவம் முஹம்மது நபிக்கு எய்திற்று.

இந்தக் கதை எப்படியென்றால், சுகப் பிரம்ம ரிஷி காட்டு வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் கடவுளைப் பார்க்க



வேண்டுமென்ற தாகமேலீட்டால், ''கடவுளே கடவுளே'' என்று கதறிக் கொண்டு போனாராம். அப்போது காட்டிலிருந்த கல், மண், மணல், நீர், புல், செடி, மரம், இலை, பூ, காய், காற்று, ஜந்துக்கள் எல்லாவற்றினின்றும், 'ஏன் ஏன்' என்ற மறுமொழி உண்டாயிற்று. அதாவது, கடவுள் ஞான மயமாய் எலலாப் பொருள்களிலும் நிரம்பிக் கிடப்பதைச் சுக முனிவர் கண்டார்.

## சுந்தர புருசர், லௌகீக தந்திரி

முகம்மது நபி மஹா ஸுˆந்தர புருஷர், மஹா லௌகீக தந்திரி, வியாபாரமானாலும், யுத்தமானாலும் முஹம்மது நபி கவனித்தால் அந்த விஷயத்தில் வெற்றி மிகவும் உறுதி. ஆதலால் அவர் பலராலும் மிகவும் அபிமானிக்கப்பட்டார்.

எனினும், புதிய மதமொன்று கொண்டு வந்ததினின்றும் அவர் சுற்றத்தாரும் அத்யந்த நண்பர்களும் பகைமை செலுத்தலாயினர். ஆனால் நபி பொருட்டாக்கவில்லை. முஹம்மது நபி (ஸல்லல்லாஹுˆ அலைஹி வஸல்லம்) அவர்கள், உலகத்தின் பொது நன்மைக்கும் தர்மத்திற்கும் நீதிக்கும் ஸத்தியத்திற்கும் அல்லாவிற்கும் முன்னே, தம்முடைய சொந்த ஸொகங்களையும், ஸௌகர்யங்களையும், வாழ்வையும், செல்வத்தையும், அதனால் விளையும் பெருமைகளையும் இன்பங்களையும், ரஷணைகளையும், உயிரின் பாதிப்பையுங்கூடச் சிறிய பொருளாகக் கருதினார்.

இவரிடத்தில் இத்தனை உறுதியான பக்தியிருப்பதை நோக்கியே, அல்லா இவரைத் தமக்கு மிகவும் பிரியமான நபியாகத் தெரிந்தெடுத்தார்.

மக்கத்தை விட்டு, இளமையிலேயே இவர் வியாபாரத்துக்காக வெளி நாடுகளில் ஸஞ்சரிக்கும்படி நேர்ந்த சமயங்களில், யூத கிருஸ்தவ பண்டிதர்களைக் கண்டு அவர்களுடைய மதக் கொள்கைகளைய் பற்றி விசாரணை செய்து வழக்கம். அதனின்றும் விக்ரஹாராதனை விஷயத்திலும் பல தேவர் வணக்கத்திலும் இவருக்குப் பற்றுதலில்லாமற் போயிற்று, ஏகேசுவரா மார்க்கத்தைக் கைக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதருக்கும் கிருஸ்தவருக்கும் பொதுவாகிய 'பழைய ஏற்பாடு' என்ற பைபிளின் பூர்வ பாகத்தை இவர் உண்மையாகவே அங்கீகாரம் செய்து கொண்டார்.

### கிறிஸ்துவும் ஒரு நபியே

கிருஸ்தவ நாதரையும் இவர் ஒரு சிறந்த நபியாகக் கொண்டார் : கடவுளின் அவதாரமாக ஒப்புக் கொள்ளவில்லை.

விக்ரஹங்களிடத்தே கடவுளைக் காட்டி வணங்குதல் பொருந்தாத கார்யமென்று யூதருக்கும் கிருஸ்தவருக்கும் தோன்றியது போலவே, ஒரு மனிதன் பக்தி ஞானங்களில் எவ்வளவு சிறப்பெய்திய போதிலும் அவன் கடவுளை நேருக்கு நேரே கண்டறிந்த வரையிலும், அவனை மிக உயர்ந்த பக்தனென்றும் முக்தனென்றும் போற்றலாமேயல்லாது, மனித வடிவத்தில் ஸாக்ஷாத் கடவுளையே சாத்துதல் பொருந்தாதென்று முஹம்மது நபி எண்ணினார்.

*–1920, ஜுலை 24*





# முத்தமிழ்க் காவலர் [கி.ஆ.பெ. விசுவநாதம்] முல்லை மலர்கள்

தீர்க்கதரிசி என்றால் பின்னால் வருவதை முன்னால் அறிபவர் என்றாகும்.

நபி என்றால் இறைவனுடைய திருத்தூதர் என்றாகும்.

எத்தனையோ தீர்க்கதரிசிகள், நபிமார்கள், உலகத்தில் தோன்றினார்கள் என்று எல்லாச் சமயத்தினரும் கூறுகிறார்கள், ஆனால் தீர்க்கதரிசி என்ற சொல்லுக்கு உரியவர்கள் நம் நபிகள் நாயகம் ஒருவர்தான்.

இது என்னுடைய முடிவு.

ஞானி ஒருவன் பின்னாலே வரப்போகின்ற செய்திகளை முன்னாலே அறியும் ஆற்றல் படைத்தவன். அந்தப் பேராற்றல் நாயகம் அவர்களுக்கு முழுவதும் இருந்தது.

### சகோதரத்துவம்

சகோதரத்துவம் – அது, மக்கள் அனைவரும் உடன் பிறந்தோர் என்பது. கறுப்பு அடிமை பிலால், வீரத் தலைவர் சைய்யது, பணக்கார அபூபக்கர், பலசாலி உமர், வாலிப வீரர் அலி ஆகிய இவ்ஐவரின் வரலாறு எல்லாம் உங்களுக்கு நன்கு தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்து இருப்பீர்கள். ஒன்றுக்கொன்று மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை.

இவர்கள் அத்தனை பேரையும் ஒரு மேடையில், ஒரு வரிசையில் நிறுத்தித் தோளோடு தோள் சேர்த்துச் சகோதரனாக்கி வைத்தது இஸ்லாம்.

இதை அவர்களைத் தவிர வேறு எவராலும் செய்ய முடியாது. வேறு எச்சமயத்திலும் காண முடியாதது. இது ஒன்று போதும் சகோதரத்துவத்தைப் பற்றிக் கூறுவதற்கு.

### சமத்துவம்

எம்பெருமானார் செய்த செயற்கரும் செயல்களில் ஒன்று சமத்துவம் என்பது. சமத்துவம் இந்துக்கள் கோயில்களிலே கிடையாது.

கிறித்துவர்களின் ஆலயங்களில் கிடையாது.

தன்னுடைய வேலைக்காரன் தொழுகைக்கு முன்னே சென்றுவிட்டால், எஜமானன் பின்னே சென்றால், அவனுக்கும் பின்னே இருந்துதான் தொழ வேண்டும்.

கிறித்துவர்கள் கோயிலில் அமைச்சருக்கு இடம், அரசனுக்கு இடம், அரச குடும்பத்திற்கு இடம், மந்திரிகளுக்கு இடம், உத்தியோகத்துக் கலெக்டர்களுக்கு இடம், மக்களுக்கு இடம் என்றெல்லாம் நாற்காலிகள் ஒழுங்குப்படுத்தி இருப்பார்கள். இந்துக் கோயில்களில் அர்ச்சகர் போகிற இடம் வேறு, ஜமீன்தார்கள் போகிற இடம் வேறு, பணக்காரர்கள் இடம் வேறு, ஏழைகள் இடம் வேறு. கடைசியாக தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடிக் கம்பத்தருகில் இடம் என ஒதுக்கப் பெற்றிருக்கும். பள்ளிவாசலில் அது இல்லை. ஆப்கன் அரசர் அதீர். ஹைதராபாத் நிஜாம், துருக்கி தலைவர் இனூனு, ஈரான் மன்னர், அரேபியா அரசர் யாராக இருந்தால்தான் என்ன? வேலைக்காரன் முன் சென்று முன் வரிசையில் இருந்தால், இந்த மன்னர்கள் அவனுக்கு அடுத்த வரிசையில் இருந்துதான் ஆண்டவனைத் தொழ வேண்டும்,.



இன்னும் ஒருபடி தாண்டிச் சொல்கிறேன். தன் வேலைக்காரனுடைய காலடியில்தான் மன்னாதி மன்னர்கள் தங்கள் முடியை வைத்து ஆண்டவனைத் தொழ வேண்டும்.

அவ்வளவு தூரம் சமத்துவம் வற்புறுத்தப் பெற்றிருக்கிறது.

### பெண் கல்வி

இப்பொழுது பாருங்கள். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்று இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் 1400 ஆண்டுகளுக்கு முன்பே ஆணுக்கும், பெண்ணுக்கும் படிப்புத் தேவை என்று நாயகம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் தீர்க்கதரிசியா இல்லையா என்று எண்ணிப் பாருங்கள்.

### சொத்துரிமை

பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் என்ற சட்டம் இப்பொழுதுதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் 1400 ஆண்டுகளுக்கு முன்பே பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டுமென்று சட்டம் செய்திருக்கிறாரே அவர் தீர்க்கதரிசியா அல்லவா என்று எண்ணிப் பாருங்கள்.

### விதவை மணம்

விதவைகளுக்கு மறுமணம் தேவை என்ற சட்டம் சட்டசபையில் இன்றைக்கு உள்ளே போகிறது. வெளியே வருகிறது. இன்னும் இழுபறியாக இழுத்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் 1400 ஆண்டுகளுக்கு முன்பே விதவைகளுக்கு மறுமணம் தேவையெனச் சட்டம் செய்திருக்கிறாரே! அவர் தீர்க்கதரிசியா அல்லவா என்பதை எண்ணிப்பாருங்கள்.

### மது விலக்கு

நம் நாட்டில் இப்பொழுதுதான் மதுவிலக்குச் சட்டம் நிறைவேறியது. அதுவும் மாறி மறைந்து கொண்டிருக்கிறது. ஆனால் 1400 ஆண்டுகளுக்கு முன்பே மது விலக்குச் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றியிருக்கிறார் என்றால், அவர் தீர்க்கதரிசியா அல்லவா என்பதை எண்ணிப்பாருங்கள்.

### ஆலயப் பிரவேசம்

நம் நாட்டில் இராஜாஜி அவர்கள் காலத்தில்தான் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்து கோவில்கள் அனைவருக்கும் திறந்து வைக்கப் பெற்றிருக்கின்றன. ஆனால் நாயகம் அவர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்பே பள்ளிவாசல்களுக்குக் கதவுகளே இல்லாமல் எல்லோருக்கும திறந்து வைக்கச் செய்திருக்கிறார்கள். அவர்கள் தீர்க்கதரிசியா அல்லவா என்பதை எண்ணிப்பாருங்கள்.

### ஏழைகள் மீது கருணை

எம்பெருமானார் அவர்கள் கருணையுள்ளம் படைத்தவர்கள். அதிலும் அவர்கள் ஏழைகளிடத்தில் காட்டும் கருணை அளவு கடந்ததாகும். அதற்கு எடுத்துக்காட்டு ஒன்று கூறுகிறேன்.

நாயகம் அவர்கள் தனக்கென்று இரண்டு ஆடைகளையும், இரண்டு தாழம்பாய்களையும் வைத்துக் கொண்டு மற்றவற்றையெல்லாம் இல்லாத மக்களுக்கு வழங்கினார்கள் என்றுதான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால், இத்தாலி தேசத்துப் பேராசிரியர் ஒருவர் அதில் ஒரு நயத்தை புகுத்தி எழுதியிருக்கிறார். அது, தனக்கென்று இரண்டு தாழம்பாய், இரண்டு ஆடைகளை வைத்துக் கொண்டு, மற்ற வல்லாவற்றையும் இல்லாத மக்களுக்கு வழங்கி, பெற்றுக் கொண்ட மக்களின் முகம் மகிழ்ச்சியடை வதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார் என்பதே!

### எளிமை

நாயகம் அவர்களைப் பல அறிஞர்கள் சூழ்ந்து கொண்டு, ''நீங்கள் தேவனா?'' எனக் கேட்டார்கள்.

'' இல்லை'' என்றார்கள்.

'' தேவகுமாரனா?'' எனக் கேட்டார்கள்.



''இல்லை, நான் உங்களைப் போன்று ஒரு மனிதன்'' என்றார்கள்.

இது அவர்களிடம் காணப்பெற்ற எளிமைக்கு ஒரு சான்று. தங்களையே கடவுள் என்று சொல்லிக் கொண்டு வாழ்ந்தவர் களையெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம்.

கடவுளுடைய அவதார புருஷர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள் பலர்.

நாயகம் அவர்களிடத்தில் இந்தச் சொல் அவர்கள் வாயிலிருந்து வந்ததே இல்லை. அத்தகையப் பெருந்தன் மையை மற்றவர்களிடத்தில் காண முடியுமா? எண்ணிப் பாருங்கள்.

### கிறித்தவர்களுக்குத் தொழ இடம்

ஒரு சமயம் கிறித்துவப் பாதிரியார் ஒருவர் நாயகம் அவர்களைப் பார்க்க வந்தார். நாயகம் அவர்கள் அப்போது ஒரு பள்ளிவாசலில் இருந்தார்கள். பேச்சு வெகுநேரம் நடந்தது. பாதிரியாருக்கு ஜபம் செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டதால், தான் வேறிடத்திற்குச் சென்று ஜபம் செய்துவிட்டு மீண்டும் வருவதாக நாயகம் அவர்களிடம் கூறினார்கள்.

நாயகம் அவர்கள் மிக அமைதியாக ''இந்த வெய்யிலில் வெளியிற்போய் வரவேண்டாமே! உங்கள் ஜபத்தை இங்கேயே செய்யலாமே'' என்று, பள்ளிவாசலில் ஒரு மூலையைக் காட்டினார்கள்.

பாதிரியார் அங்கு சென்று ஜபம் செய்ய ஆரம்பித்தார்.

இந்நிகழ்ச்சி நாயகம் அவர்களோடு இருந்த சிலருக்கு மனப்புழுக்கத்தையும் வெறுப்பையும் உண்டாக்கியது.

அவர்கள் நாயகம் அவர்களிடம் வந்து ''பள்ளி வாசலின் தூய்மை கெட்டவிட்டதே'' என வருந்திக் கூறினார்கள்.

அதற்கு நாயகம் அவர்கள், ''இரண்டு ஆண்டவன் இல்லை. பாதிரியார் வணங்கும் ஆண்டவனும் நாம் வணங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனும் ஒருவனே'' எனக் கூறி அவர்களை அமைதிப் படுத்தினார்கள்.

இது, ''எல்லாச் சமயத்தினரும் வணங்குகின்ற கடவுள் ஒருவனே'' என என்னும் நாயகம் அவர்களின் பரந்து விரிந்த உள்ளத்தை நமக்குப் படம் பிடித்துக் காட்டுவதாகும்.

## வணிகம்

நாயகம் அவர்கள் முதல் நாற்பதாண்டுக் காலத்தில் ஒட்டக வணிகம் செய்தார்கள். அப்போது அவர்களிடம் 40 ஒட்டகங்கள் இருந்தன.

வெளியூரிலிருந்து ஒட்டகம் வாங்க வந்த ஒருவர், நாயகம் அவர்களிடம் 40 ஒட்டகங்களுக்கும் சேர்த்து விலை கூறும்படி கேட்டார். முதலில் ஒட்டகங்களனைத்தையும் போய்ப் பார்த்து வரும்படி நாயகம் அவர்கள் கூறினார்கள்.

வியாபாரி போய்ப் பார்த்து வந்து மறுபடியும், ''எல்லா ஒட்டகங்களுக்கும் சேர்த்து விலை என்ன?'' என்று கேட்டான்.

அதற்கு நாயகம் அவர்கள் சிரித்துக்கொண்டே, ''அதில் ஒரு ஒட்டகம் நொண்டி, ஒரு கால் தரையில் ஊன்றாது. மூன்று கால்களாலே தத்தி தத்தி நடக்கும். அதைப் பார்த்தீரா?'' என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட வியாபாரி அஞ்சி நடுநடுங்கிப் போனான். அவரது நேர்மைக்கு வணக்கம் செலுத்தி, ''அந்த நொண்டி ஒட்டகமும் மற்ற 39 ஒட்டகங்களுடன் சேர்த்து இருக்கட்டுமே'' என்று கேட்டு, வாங்கிப்போனான்.

இந்தக் காலத்து வியாபாரிகளிடம் நாம் இந்த நேர்மையையும் நாணயத்தையும் காண முடியுமா?

## தெய்வ பக்தி

ஒரு யூதன் தன் வாளை எடுத்துக் கொண்டு இவர்களை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக வெட்ட நெடு நாளாகக்



காத்திருந்தான். அவனுக்கு வாய்ப்பு வரவில்லை. பல நாள் தேடிக் கொண்டிருந்தான். அப்போதும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. பலர் கூட இருப்பதால் தனித்துச் சந்திக்க முடியவில்லை.

ஒரு நாள், அவன் சாலையில் வரும்பொழுது, நாயகம் அவர்கள் ஒரு மரத்தடியில் களைப்பைத் தீர்த்துக் கொள்ளப் படுத்திருந்தார்கள். அப்படியே கண்ணயர்ந்து விட்டார்கள்.

இதைக் கண்டுவிட்டான் யூதன். எடுத்தான் வாளை, நீட்டினான் கழுத்தண்டை! யாரும் அங்கு தடுப்பாரும் இல்லை. அவரும் அங்கு விழிப்போடு இல்லை. நல்ல உறக்கம். வாளை ஓங்கிவிட்டான் வெட்டிக் கொல்வதற்கு!

ஒரே வினாடிதான்! உள்ளத்தில் வெற்றி பெற்ற மகிழ்ச்சியோடு, ''ஓய் முகமதுவே ! உன்னை யார் இப்போது காப்பாற்றப் போகிறார்கள்?'' என்று உரக்கக் கத்தி வாளை ஓங்கினான்.

உடனே நாயகம் அவர்கள் விழித்து, அவனையும் அவனது வாளையும் கண்டு ஆச்சரியப்பட்டு, ''அல்லாஹ்'' என்று கையை நீட்டி தேக்கினார்கள். அவன் குழம்பி 'அல்லாஹ் காப்பாற்றப் போகிறார்' என்ற விடை வந்ததாக எண்ணினான். கை நழுவி வாள் கீழே விழுந்துவிட்டது.

நாயகம் அவர்கள் அந்த வாளைக். கையில் எடுத்துக் கொண்டு, ''இப்போழுது உன்னை யார் காப்பாற்றப் போகிறார்கள்?'' என்றார்கள்.

அவன் விழித்து ''நீங்கள் தான்'' என்றான்!

''அல்ல; உன்னையும் என்னையும் காப்பாற்றுபவன் ஆண்டவனே'' எனக் கூறி சென்றுவிட்டார்கள்.

இது அவர்களது தெய்வ பக்திக்கு மற்றொரு சான்று.

தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம் என்பது ஒரு நீதி, தன்னைக் கொல்ல வந்த மனிதனையும் கொல்லாமல் விட்டது நாயகம் அவர்களின் நீதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொதுத் தொண்டு

பொதுத் தொண்டு செய்கின்ற ஒவ்வொருவனும் முதலில் தன் வீட்டிலிருந்தே பொதுத் தொண்டைத் தொடங்க வேண்டும் என்பது நாயகம் அவர்களின் கொள்கை. இதைப்பின்வரும் அவரது போதனை நமக்கு நன்கறிவிக்கிறது.

அது பள்ளிவாசலில் விளக்கேற்றி வைக்கப் புறப்படுமுன் உங்கள் வீட்டில் விளக்கேற்றி வைத்துப் புறப்படுங்கள் என்பது. வீட்டை இருளடைந்து போகும்படி செய்கிறவன் பள்ளிவாசலில் விளக்கேற்றி வைக்க தகுதியுடையவன் அல்லன் என்பது நாயகம் அவர்களின் கருத்து.


### நட்பு

''அண்டை வீட்டுக்காரர்களோடு எப்பொழுதும் நட்பாய் இருங்கள்'' என்பது அவர்களது போதனைகளிலொன்று, அதற்கு வழியும் கூறியிருக்கிறார்கள்.

அது, 'உங்கள் வீட்டில் பலகாரங்கள் பண்ணும் போதெல்லாம், அண்டை வீட்டுக்காரர்களுக்கும் அனுப்பி அவர்களை மகிழ்வியுங்கள்' என்பது. அண்டை வீட்டுக்காரர் களின் பகையால் துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு இது அருமையான கருத்து.

நாம் கொள்கைகளை நூற்றுக் கணக்கில் கொட்டுகிறோம். திட்டங்களைப் பத்துக் கணக்கில் வகுக்கிறோம் செய்கிற ஆற்றல் நமக்கு இல்லை. நாயகம் அவர்களிடத்தில் இருந்தது. எதை அவர்கள் சொல்லுகிறார்களோ அதையே அவர்கள் செய்வார்கள். செய்யக் கூடியதையே சொல்லுவார்கள். மக்களால் செய்ய முடியாத எதையும் அவர்கள் ஒரு நாளும் போதித்ததில்லை. அதுதான் அவர்களிடம் ஒரு பெருஞ்சிறப்பு. அதனாலேயே அவர்களிடம் எனக்குப் பற்று அதிகம்.





## தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் பொதிகை மலர்!

அண்ணலார் நபிகள் திறந்த மேனியோடு அங்கே மக்கா ஆலயத்தில் தெற்கே இருந்து வருகின்ற காற்றை சுகந்தத்தை நுகர்வாராம். அதற்கு அவர் 'ருக்னு ஹிந்த்' என்று சொல்வாராம். ''ஏகத்துவக் கொள்கை மணம் வீசுகின்ற அந்த இந்தியக் காற்றை சுவாசிக்கின்றேன்'' என்று சொல்வாராம்.

எல்லாச் சமயங்களின் சாரங்களும் பரம்பொருளை எண்ணித் தியானிக்கின்றன. அதை உருவத்திலோ, அடையாளத்திலோ, நிறத்திலோ, அனுஷ்டானங்களிலோ, அந்தந்த காலத்தில் தோன்றிய ஞானிகளின் தாக்கம் இருக்கலாம். ஆனால், கால வெள்ளத்தின் ஓட்டத்தில் பரம்பொருளைத் தேடுகின்ற வேட்கையில் எல்லாச் சமயத்தவரின் பயணமும், ஒரே திக்கில்தான் இருக்கின்றது. ஆனாலும், வரலாற்றின் ஆராய்ச்சியில் சிலர் தவறான செய்திகளை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் சென்றுவிடு கின்றனர். வாளால் பரப்பப்பட்ட நெறி என்று சொல்கின்றனர். ஆனால் அண்ணல் நபிகள் நாயகத்தின் வாழ்க்கையை ஆய்ந்து பார்க்கின்றோம் அவர் பெரிய தந்தையார் தாம் கொண்டிருந்த நம்பிக்கை நிலையிலேயே மறைந்து போகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல் நபிகள் தமது பெரிய தந்தையாரை நிர்ப்பந்தப் படுத்தவில்லை. உயிருக்குப் பொராடிக் கொண்டிருக்கிற வாழ்க்கையின் இறுதிப் பொழுதிற் கூட செய்யவில்லை.

ஆக, மார்க்கம் நிர்ப்பந்தத்திற்கு அப்பாற்பட்டது என்பதை அவர் தம் வாழ்விலே நிரூபித்திருக்கிறார்.

இந்த நிலையில் தான் எண்ணிப் பார்க்கிறோம். இந்த நாட்டில் 600 ஆண்டு காலம் இஸ்லாமிய மன்னர்கள் ஆண்டிருக்கிறார்கள். ஆனாலும் இங்கு இந்து திருக்கோயில்கள் இருக்கின்றன. இந்து ஆலயங்களுக்கு மான்யங்களாக நிலங்களைத் தந்திருக்கிறார்கள். ஏன் உலகின் ஒரு மூலயில் ஒரு கிறித்துவ மாதா ஆலயத்திற்கு ஏற்பட்ட இடர்ப்பாட்டை, இன்னலை அண்ணலார் நபிகளாரின் போர்ப்படை வீரர்கள் காத்திருக்கிறார்கள்.

சிலையுருவ வழிபாட்டில் நபிகளுக்கு நம்பிக்கையில்லா விட்டாலுங்கூட, அந்தக் கிருத்துவ ஆலயத்தைக் காக்கின்ற பணியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.



**ஸ்ரீலஸ்ரீ**
**மதுரை**
**ஆதீனகர்த்தர்**

# அடுக்கு மல்லிகள்!

ஒரு நபியின் அந்தஸ்து என்ன என்பதை, இசுலாம் மிகத்தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. நபிகளானவர், மக்களை இறைவனுக்கு அடிமைகளாக்க வந்தவர்களே தவிர, தனக்கு அடிமைகளாக்க வந்தவர்களல்லர்; அதற்காகவே, ''கலிமயே ஷஹாதத்'' என்கின்ற மந்திரத்தை ஒவ்வொரு நாளும் பல தடவை உச்சரித்திடல் வேண்டும் என்று நபிகள் நாயகம் அவர்களே போதித்திருக்கிறார்கள்.

அம்மந்திரத்தில், ''அஷ்ஷஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ'' என்னும் வாசகமும் மொழியப்படு கின்றது. இதன் பொருள்: ''நபிகள் நாயகம் அவர்கள் இறைவனின் அடியாரும், தூதரும் ஆவார்கள் என்று நான் பகர்கின்றேன்'' என்பதாகும்.

நபிகள் நாயகம் அவர்கள் ஒரு மனிதரே, இறைவன் அல்லர். மனிதனுக்கு மேம்பட்ட தன்மை வாய்ந்தவர் அல்லர். (Super Human) தூக்கம், பசி, தாகம், மகிழ்ச்சி, சோர்வடைதல், நோயுறுதல், காயப்படுதல் போன்ற மனிதனுககு உரிய குணங்களிலிருந்து விடுபட்டவர் அல்லர் (Not Above the Human Limitations) என்பதைத் திருக்குர்ஆன் 69 : 4-46 தெளிவுப் படுத்துகின்றது.

நபிகள் நாயகம் அவர்கள் ஓர் அருளாளர். அவர் மூலம் இறைவனுடைய பேரருளை பெற்றிட வேண்டும் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் அடிப்படைத் தத்துவமாகும். நாயகம் அவர்கள் வாயிலாக இறைவன் ஒரு மேலான மதிப்பீட்டு அமைப்பினையும் (Scheme of Permanent Values) மனித குலத்திற்கு அருளியுள்ளான்.

இசுலாம் மார்க்கம், ஒரு முழுமையான கலாசாரத்தையும், மனித வாழ்வின் பண்பாட்டினையும் ஒன்றிணைத்துத் தருகின்ற ஓர் உன்னத வாழ்க்கை நெறியாகும். வாழ்வின் துறைகள் அனைத்திலும் ஒழுக்க ரீதியான வழிகாட்டுதலை (Moral Guidance) இசுலாம் வழங்குகின்றது.

இசுலாம் என்னும் அரபிச் சொல்லுக்குக் "கீழ்ப்படிதல்", "கட்டளைகளை நிறைவேற்றுதல்" என்று பொருளாகும். மற்றொரு பொருள் "சாந்தி" என்பதாகும். இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதன் மூலமும் (Absolute surrenderness before the Almightly God) அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பதனாலும் மாத்திரமே ஒருவன் தன் உடலுக்கும் உள்ளத்திற்கும் உண்மையான சாந்தியைப் பெறமுடியும் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது.

இறை நிராகரிப்பு கூடவே கூடாது (குஃப்ரு). அது ஒரு பெரும் கொடுமை மாத்திரமல்ல: இறைவனுக்கு எதிரான ஒரு புரட்சி.





# டாக்டர் பத்மஸ்ரீ நல்லிகுப்புசாமி தூவும் பிச்சிப் பூக்கள்

சென்னை மயிலை கபாலீஸ்வரர் கோவில் அறங்காவல் குழுத் தலைவராக நான் இருக்கிறேன். நான் முதன் முதலில் 1993ல் அந்தப் பொறுப்புக்கு வந்தேன். ஆண்டு தோறும் நடைபெறும் கோவில் விழாவில் ஆற்காடு நவாபுக்கு மரியாதை செய்யப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் கோவிலுக்கு தெப்பக்குளம் கட்ட இடம் இல்லாமல் இருந்தது. உடனே ஆற்காடு நவாப்தான் தங்களுக்குச் சொந்தமான தெப்பக்குளத்தை கோவிலுக்கு கொடுத்து உதவினார்கள். ஆண்டுக்கு 3 நாள் மட்டும் முஹர்ரம் விழாவுக்காக முஸ்லிம்கள் இதனைப் பயன்படுத்துவார்கள். மற்ற நாட்களில் கோவில் வைபவங்களுக்குப் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடு.

இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இன்றுவரை நவாப் குடும்பத்தினருக்கு கோவில் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

அதேபோன்று, திருவல்லிக்கேணி திருவெற்றீசுவரன் கோவில் கட்ட நவாப்தான் இடம் கொடுத்துள்ளார்கள். கோவிலில் பராமரிப்புக்காக பல்வேறு மானியங்களும் கொடுத்துள்ளார்கள். அது இன்றுவரை தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி பல விஷயங்கள் மத ஒற்றுமைக்கு நல்லிணக்கத்துக்கு உதாரணமாக இருந்து வருகின்றன. இவற்றிற்கெல்லாம் காரணம் நபிகளின் போதனைதான்! நபியின் அருகில் அமர்ந்திருந்தாலும் ''தாயின் காலடியில் சொர்க்கம்'' என்பதும், நதியின் அருகில் அமர்ந்திருந்தாலும் தண்ணீரை விரயமாக்காதீர்கள் என்ற போதனையும் என்னை மிகவும் கவர்ந்தவை.

அதேபோன்று இன்று நான் வணிகத்துறையில் சிறந்து விளங்குகிறேன் என்றால், எல்லோராலும் பாராட்டப்படும் அளவுக்கு இருக்கிறேன் என்றால், அதற்குக் காரணமானவர்களில் முஸ்லிம்களும் உண்டு.

சென்னை தி.நகர் எல்.கே.எஸ். கோல்டு ஹவுஸ் அதிபர் எஸ். அக்பர்ஷா எனது நண்பர். அவர் என்னுடன் இருக்கும் போது எனக்காக சைவ உணவை உண்பவர். அவர் எனக்கு பல விஷயங்களை சொல்லித் தந்துள்ளார். நாம் வியாபாரம் செய்யும் போது அதிக லாபம் வைத்து வியாபாரம் செய்யக்கூடாது. நியாயமான லாபத்தைத்தான் எதிர்பார்க்க வேண்டும். வாடிக்கையாளர்களை மனம் நோகாமல் நடந்து கொள்ள வேண்டும். விற்கும் பொருட்களின் அளவு கூடுதலாக இருக்கலாமே தவிர ஒருபோதும் குறைந்து விடக்கூடாது என்பது போன்ற விஷயங்களை நபிகள் நாயகம் சொல்லியுள்ளதாகவும், நபிகள் ஜவுளி வியாபாரத்தில் கூட ஈடுபட்டுள்ளதாகவும் அக்பர்ஷா என்னிடம் தெரிவித்துள்ளார்கள். அவற்றையெல்லாம் நான் பின்பற்றி வியாபாரம் செய்வதால் இன்று நல்ல நிலையில் உள்ளேன்.

இப்படி எல்லா வகையிலும் எல்லோரும் ஏற்றிப் போற்றக் கூடியதாக நபிகள் நாயகத்தின் போதனைகள் அமைந்துள்ளன என்றறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறேன்.





# கவியரசி சரோஜினியின் கனகாம்பரம் !

எந்தச் சகோதரத்துவ அடிப்படையில் புதிய உலகத்தை நிர்மாணிக்க வேண்டுமென்று இன்றைய நாகரிக உலகம் விரும்பி நிற்கிறதோ, அதே சகோதரத்துவத்தை ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே (இன்றைக்கு 1400 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது)-பாலைவனத்தில் ஒட்டகம் ஓட்டிக் கொண்டிருந்த மனிதரால் பிரசாரம் செய்யப்பட்டது.

*அரபு நாடு அந்தகாரத்தில்*

எனது முன்னோர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு தத்துவ ஞான உபதேசம் செய்து கொண்டிருந்த காலத்தில் அரபு நாடு அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தது. அநாகரிகமும் காட்டுமிராண்டித் தனமும் அங்கு குடிகொண்டிருந்தன.

புத்தர்,புத்தகயாவில் போதி மரத்தடியிலும் சாரநாத்திலும் பரி நிர்வாணம் பற்றி பிரசாரம் செய்து கொண்டிருந்த காலத்தில் உலக ஜனநாயகம் என்றால் என்னவென்றே ஒருவருக்கும் தெரியாது.

இயேசுநாதர் எதிரிகளால் சிலுவையில் அறையப்பட்ட காலத்தில் கூட ஏக சகோதரத்துவக் கொள்கை இந்த உலகில் இடம் பெறவில்லை. ஆனால் அது எதிர்த்து போரிடப்பட்டது. கால்களால் மிதித்துத் துவைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, அறேபியாவிலே ஒட்டகம் ஓட்டிக் கொண்டிருந்த ஒரு மனிதர் இறுதியாக - இந்த உலகில் தோன்றி - ஏக சகோதரத்துவத்துக்கு ஒரு சரியான விளக்கம் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. எந்தவிதமான உயர்வு தாழ்வும் வேற்றுமையும் இல்லாத மக்களைக் கொண்ட ஒரு 'குடிஅரசு' எப்படி இருக்க வேண்டும் என்பதை அவரே விளக்க வேண்டியிருந்தது.

ஒட்டகம் ஓட்டிக் கொண்டிருந்த இந்த மனிதர் யார்?

பாலைவனத்திலே தனது ஒட்டகங்களைப் பாதுகாத்து வந்த இவர், உலகத்துக்கு நம்பிக்கையூட்டும் நல்ல செய்தியைக் கொண்டு வந்தது ஏன்?

பல பெரிய மதங்கள் மீது மாசு படிந்து விட்டது. அந்த மதங்களின் குருமார்கள் இழைத்த கொடுமைகள் சகிக்க முடியவில்லை. எனவே, மதத்துக்கு மாசு கற்பித்த அந்தக் கொடுமையிலிருந்து விடுதலைபெற வேண்டும் என்று இந்த உலகம் விழைந்தது.

## ஆண்டவன் ஒருவன்

உலக மக்களுக்கு அவ்வப்போது இழைக்கப்படுகின்ற கொடுமைகளிலிருந்து அவர்களை எப்படியாவது விடுவித்து விடுகின்ற ஆண்டவன் இந்த சாதாரண பாலைவன மனிதரின் இதயத்திலே, ''ஆண்டவன் ஒருவன்'' என்ற உண்மையை உணர்த்தினான்.

ஆண்டவனால் படைக்கப்பட்ட மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற உண்மையை உணர்த்த இந்த ஏக தெய்வக்கொள்கையே போதிய ஆதாரமாயிருக்கிறது.

முஸ்லிம்களே! உங்களுடைய மாபெரும் பொறுப்பை நீங்கள் உணரவேண்டுமென்று விரும்புகிறேன்.

உங்களின் பரம்பரையும் பெருமைகளும் மகத்தானவை. ஆனால் உங்களுடைய தீர்க்கதரிசியின்-நபியின் -கொடியை உயர்த்திப் பிடிக்க நீங்கள் என்ன செய்கிறீர்கள்?



அவர் உங்களுக்கு உலக சகோதரத்துவத்தைப் போதிக்க வந்தார்.

ஆனால் நீங்களோ உங்களுடன் வாழ்கின்ற ஏனைய சமூக மக்களுடன் பேசாமல் பிரிந்து நிற்கிறீர்கள்.

அவர் உங்களுக்கு அன்பை போதிக்க வந்தார். ஆனால் நீங்கள் உங்களைச் சுற்றிலும் பெரிய மதிற் சுவர்களை எழுப்பிக் கொண்டு. தன்னந்தனியாக வாழத் தொடங்கி விட்டீர்கள். இதெல்லாம் மகான் முகம்மது நபியின் போதனைகளுக்கு முற்றிலும் விரோதமானதென்பதை மறந்து விட்டீர்கள்.

ஐரோப்பா முழுதுக்கும் நீங்களே ஒரு காலத்தில் அறிவுச்சுடர் கொளுத்தினீர்கள். ஆனால் உங்களுடைய மக்கள் இன்று அறியாமையிலும்,அந்தகாரத்திலும், மூடப்பழக்க வழக்கங்களிலும் மூழ்கித் தவிக்கிறார்கள். இதற்காகவா உங்கள் நபிகள் நாயகம் இந்த உலகிலே தோன்றினார்கள்? உங்களது மாபெரும் மதத்திலே தோன்றிய மகான்களின் நினைவாக எழுப்பப்பெற்றுள்ள இந்த மண்டபங்களும், மாளிகைகளும் உங்களுக்கு அறிவித்துக் கொண்டிருப்பதுதான் என்ன?

இஸ்லாமிய புத்துலகத்தைப் புனர் நிர்மாணம் செய்ய வேண்டிய நீங்கள் உங்களின் இறைவன் திருத்தூதர் இயம்பிச்சென்ற இணையற்ற, கொள்கைகளை முற்றிலும் அடியொற்றி நடக்க வேண்டாமா?

அவர் தம்மைத் தாமே கடவுள் தன்மை படைத்தவர் என்று கூறிக் கொள்ளவில்லை. அல்லது ஆண்டவனுக்குப் பிரதிநிதி என்று அவர் பேசிக் கொள்ளவில்லை. வருந்தியுழைப்பதில் வாழ்வு இருக்கிறது. ஒற்றுமையில் ஒருமைத் தன்மையும் இன்ப உயர்வும் நிலவுகின்றன. தன்னலத் தியாகத்தால் நம்பிக்கை உதயமாகிறது.

## நபி அளித்த பெருமைகள்

ஆடுமாடுகளைப் போலவும் தட்டுமுட்டுச் சாமான்களைப் போலவும் ஒரு காலத்தில் நீங்கள் நடத்தி வந்த பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்துக்கு நபிபெருமானார் அளித்த பெருமைகளையும் உரிமைகளையும் பாருங்கள்.

''இறைவனது வெற்றிக்கும் பெருமைக்கும் துணை நின்றவர்கள் நாங்களே, எளிய வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக ஒரு கை ராட்டினத்தையும், மாவரைக்கும் கல்லையும் மட்டுமே தமது சீதனப் பொருளாகப் பெற்று வந்த பீவி ஃபாத்திமா நாயகத்தின் வழி வந்தவர்களும் நாங்களே'' என்று உங்கள் பெண்கள் உலகத்துக்கு அறிவிக்க வேண்டும்.



# சிந்துப் பேரறிஞர் வாஸ்வானி

## வாடாமலர்கள்

இஸ்லாம் நெடுங்காலமாகவே, 'உலகை விநாசப்படுத்த தோன்றியுள்ள ஓர் எரிமலை சக்தி' என்று கருதப்பட்டு வருகிறது. ஆனால் அவ்வழுக்காறு இந்நாட்டில் சிலராலும் மேற்கொள்ளப்படுகிறதே என்று துயருறுகிறேன்.

இஸ்லாத்தை நிலை நிறுத்திய அம்மஹானுபாவரைப் பற்றி அசூயை கொண்டுள்ள படித்த இந்துக்கள் பலரை யானறிவேன்.

இஸ்லாமிய சரித்திரத்தின் முன்னணியில் அந்தப் பெரிய நபி முஹம்மத் (ஸல்) நிற்கிறார்கள்.

அவரது வாழ்க்கை ஓர் இணையற்ற வனப்பும், சௌந்தர்யமும் வாய்ந்தது.

'ஹிராக்'குகையில் அவர் நோற்று வந்த நோன்பினையும் செய்து வந்த தியானங்களையும் நினைக்குங்கால், ''இதோ! ஓர் ஆரிய யோகி இருக்கின்றார்'' என்று யான் எனக்குள்ளே கூறிக்கொள்வதுண்டு.

அவருடைய சூட்சும தரிசனங்களையும் குரல்களையும் உணரும் பொழுது ''பிரபஞ்ச படைப்பாளி ஒரு அபார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைங்கர்யத்துக்காக தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள மத்திய உபகரணம் இதோ இருக்கின்றது" என்று யான் கூறுவதுண்டு.

அவர் தமது காரியத்தைத் தொடங்குங்கால், அவர்கள் (அறபிகள்) பண (இலஞ்ச)த்தைக் கொடுத்து அன்னவரை சரிப்படுத்திவிட பார்க்கிறார்கள்; அவரைக் கொன்று விடுவதாய் அவர்கள் அச்சுறுத்துகிறார்கள். அப்பெரியார் இலஞ்சத்துக்கு வசப்படாமலும் அச்சங்கொள்ளாமலும் (எதிர்த்து) நின்றார்கள்.

அன்னாரது எளிய தன்மையிலும் பணிவிலும், இரக்கத்திலும் அவர் எனக்கோர் ஆரிய ஞானியையே நினைவூட்டுகிறார்.

அவர் தம்முடைய மாட்டினின்று தாமே பால் கறக்கிறார். தம் தரையைப் பெருக்கிக் கொள்கிறார்; தம்முடைய கிழிந்த ஆடைகளை தாமே தைத்துக் கொள்கிறார். தம்முடைய குதிரையையும் ஒட்டகத்தையும் அவர் நேசிக்கிறார். தம்முடைய சொந்த கரங்கொண்டே அவற்றின் வியர்வைகளை துடைக்கிறார். பூனை ஒன்று அவரது ஆடையில் படுத்துறங்குகிறது. அவர் அந்த பூனையின் உறக்கத்தை கலைக்க இணங்கவில்லை. அவர் கௌரவத்தை ஆசிப்பதில்லை. தம்மை மானிட இனத்திலும் மேம்பட்டவராய் செய்ய வேண்டாமென்று அவர் தம் ஜனங்களை எச்சரிக்கிறார்.

"யானொரு மனிதனே. மனிதனிலும் மேம்பட்டவனல்லன், என்னை அல்லாஹ்வின் அடிமை என்றழையுங்கள்" என்று அன்னார் கூறுகின்றார். (சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.)





# உலக நாடகவியல் முன்னோடி ஜார்ஜ் பெர்னாட்ஷா பூ மாலை

முகம்மது நபியின் நற்பண்புகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. மனித வாழ்க்கையைப் பற்றிய அவருடைய கொள்கைகளை நான் ஆதரிக்கிறேன்.

நான் முஹம்மதுடைய மார்க்கத்தை எப்பொழுதும் உன்னத நோக்குடையது என்றே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஏனெனில், அதனுடைய அற்புதமான ஜீவ சக்தியைப் பற்றி வியந்ததுதான் காரணமாகும்,

அந்தந்த காலத்துக்கு ஏற்றவாறு ஒத்துவரக்கூடியபடி தன்னைத் தானே தயார் செய்து கொள்ளக்கூடியதும் உலக வியாபகத்தின் மாறுதல்களுக்கேற்ப சகலவிதமான ஒப்பில்லா கொள்கைகளை உடையதுமான ஒரே மார்க்கம் இஸ்லாமே.

முஹம்மதின் மார்க்கமானது நாளை ஐரோப்பா முழுமைக்குமே ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய மார்க்கமாக ஆகிவிடுமென்று முன்னொருமுறை கூறியிருந்தேன். அது அன்றைய ஐரோப்பாவால் அங்கீகரித்துக் கொண்டே வரப்படும் ஒரு மார்க்கமாக ஆகிவிட்டதென்பதினாலேயே மத்திய காலத்துப் பாதிரிமார்கள் மௌட்டீகத்தினாலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது மூட பக்தியுள்ள மத வெறியினாலோ இஸ்லாத்தின் மீது வசை மொழிகளை குவித்து வந்தனர்.

அவர்கள் உண்மையிலேயே முஹம்மது என்னும் மனிதரையும் அவருடைய மார்க்கத்தையும் ஒன்று சேர்த்து வெறுக்கவே பயிற்றப்படுகின்றார்கள்.


அவர்களுக்கு முஹம்மத் என்பவர் 'தஜ்ஜாலா'கவே தோன்றுகின்றார்.

நபிகளின் இஸ்லாமிய பிரச்சாரத்துக்கு எதிராக பிடிவாதமாக நீண்ட காலம் மக்காவாசிகள் நடத்திய போராட்டம் அவர் மக்காவை வெற்றி கொண்டபோது அந்த நகரை ரத்தக்களமாகச் செய்திருக்க வேண்டும்.

ஆனால் முஹம்மது நபி (ஸல்) யாவருக்கும் பொது மன்னிப்பு அளித்தார். தம்மையும், தம் சகாக்களையும் கேலி செய்து, இழிவுபடுத்தி, சித்திரவதைக்குள்ளாக்கிய சம்பவங்களைச் சுட்டிக் காட்டாமலும், தம் நின்றும் தம் பகைவர்களின் நெஞ்சங்களில் இருந்தும், அந்தச் சம்பவங்களின் நினைப்பையே அகற்றிவிட்டார்! அவர் மிக கருணை உள்ளத்துடனும், நட்புடனும் அந்த மக்களை நடத்தினார். அவரை மனித சமூகத்தின் இரட்சகர் என்றே கூற வேண்டும். அவரைப் போன்ற ஒரு மனிதர் உலகத்தில் தலைவர் ஸ்தானத்தை ஏற்றுக் கொள்வதாயிருந்தால் தற்போது உலகம் பெரிதும் கோரி நிற்கும் சாந்தியையும், சமாதானத்தையும் கொண்டு வரக்கூடிய முறையில் அவர் வெற்றி பெற்றுவிடுவார் என நம்புகிறேன்.

உலகில் கடைசிவரை நிலைத்திருப்பது 'இஸ்லாம்தான்'
-(1929-ல் வெளியான 'Getting Married' என்னும் நூலில்)





# தாமஸ் கார்லைல் தாமரை மலர்கள்

ஒளிவீசும் கண்களும், சமூக உணர்வுமிக்க ஆன்மாவும் ஆழமான இதயமும் கொண்ட இந்தப் பாலைவனப் புதல்வர் உயர்ந்த நோக்கங்கள் உடையவராக இருந்தார்.

மற்றவர்கள் எல்லாம் (ஆன்மிகப் பிரச்சினைகளுக்கும், சமூகப் பிரச்சினைகளுக்கும்) வழிவழியாக வந்த குருட்டு விதிமுறைகளையும்,செவிவழிச் செய்திகளையும் பின்பற்றிச் செயல்படும்போது அவர் மட்டும் அத்தகைய சமய மரபு முறைகளுக்குள் தம்மை மறைத்துக் கொள்ள விரும்பவில்லை. அந்த மனிதர் தன்னந்தனியராய்ப் பிரச்சினைகளின் உண்மை நிலைகளைச் சந்தித்தார்.

அறபு மக்களின் வழக்கப்படி முஹம்மது அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் ரமலான் மாதத்தில் தனிமையில் அமைதியாக தியானம் செய்துவந்தார், இந்த வழக்கம் இயற்கையான வழக்கம்; நல்ல வழக்கம். அவர் மக்காவுக்கு அருகிலுள்ள ஹிரா மலைக்குகையில் வழிபாட்டிலும் தியானத்திலும் இருந்த போது அவருக்கு வயது நாற்பது.

அந்த ஆண்டு அவர் ஹிரா குகையில் தியானம் செய்யச் சென்றபோது அவருடைய துணைவியார் கதீஜா பிராட்டியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் இருந்தார். அல்லது அருகில் ஓர் இடத்தில் இருந்தார், அப்போது தம் உள்ளத்தைப் பற்றி அவர் தம் துணைவியாரிடம் கூறினார்.

## அல்லாஹ் மிகப் பெரியவன்

சொல்ல ஒண்ணாப் பெருமையுள்ள இறைவனின் பேரருளால் அவர் விடையைக் கண்டுகொண்டார். இப்போது அவர் அறியாமை இருளிலோ, ஐயப்பாட்டிலோ இல்லை. அவர் அனைத்தையும் கண்டு கொண்டார். அறபு மக்கள் வழிபட்டு வரும் இழிவான உருவச் சிலைகள், சிலைவணக்க வழிபாடு தொடர்பான குருட்டுக் கோட்பாடுகள் அனைத்தும் பொருளற்றவை. இறைவன் ஒருவனே எல்லோரிலும் பெரியவன். சிலைகளை வணங்கி வழிபடுவதை விட்டு விலகி அந்த ஏக இறைவனையே வணங்க வேண்டும். இறைவன் மிகப் பெரியவன். அந்த மக்கள் வழிபட்டு வரும் மரச்சிலைகள் - ஏன் எந்தச் சிலைகளுமே - உண்மையான இறைவன் அல்ல. அல்லாஹ்வாகிய அந்த ஏக இறைவனே உண்மையானவன். அவனே நம் அனைவரையும் படைத்து பாதுகாத்து வருகிறான். நாமும் ஏனைய படைப்புக்களும் அவனுடைய பிம்மங்களே என்றும் நிலைத்திருக்கும் அந்தப் பேரொளியை மறைத்திருக்கும் நிலையற்ற திரைகள் நாம். அல்லாஹு அக்பர் - அல்லாஹ் மிகப் பெரியவன் !

நபிகள் நாயகம் முஹம்மது அவர்கள் தம்முடைய கொள்கையை -ஏக இறைவனையே வணங்க வேண்டும் என்ற இஸ்லாமிய நெறியை - ஒவ்வொரு மனிதரிடத்திலும் எடுத்துரைத்தார். பெரும்பாலானோர் அவரை அலட்சியப் படுத்தி எள்ளி நகையாடினர். மூன்று ஆண்டுகளில் தம்மைப் பின்பற்றுபவர்களாகப் பதின்மூன்று பேரை மட்டுமே அவர் பெற்றார் எனக்கருதுகிறேன். அவருடைய வளர்ச்சி ஆமை வேகத்தில் இருந்தது. இது போன்ற புதிய கொள்கைகளைச் கூறுபவர்களுக்கு வழக்கமாக கிடைக்கும் ஆதரவே அவருக்கும் கிடைத்தது.



## அலி புலியின் துணிவு!

சுமார் மூன்றாண்டுகளுக்குப் பிறகு அவர் முக்கியமான உறவினர்கள் நாற்பது பேரை விருந்துக்கு அழைத்தார். விருந்து முடிந்த பின்னர் அவர்களிடம் தம்முடைய ஏக இறைக் கொள்கையை எடுத்துரைத்தார். தமக்கு ஆதரவளித்துத் தம் கொள்கையை ஏற்றுக் கொள்பவர்கள் யார் யார் என்று வினவினார். அப்போது பெரும் அமைதி நிலவியது. ஒருவரும் பேசவில்லை. நீண்ட அமைதி நிலவியதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அபூதாலிபின் புதல்வர் அலி அவர்கள் எழுந்து மன எழுச்சிமிக்க, உணர்ச்சி மிகு சொற்களால் உரத்துப் பேசி, நாயகம் அவர்களின் கொள்கையைத் தாம் ஏற்றுக் கொள்வதாகத் துணிந்து தெரிவித்தார்.

நாயகம் அவர்களின் பெரிய தந்தையார் அபூதாலிபும் அங்கே இருந்தார்.

''முஹம்மதே! இவற்றைக் குறித்துச் சற்று அமைதியாக இருக்கமாட்டீரா? உம்முடைய கொள்கையில் நீர் நம்பிக்கை வையும். மற்றவர்களும் நம்ப வேண்டும் என்று தொந்தரவு தர வேண்டாம். உம்முடைய புதிய கொள்கையை நீர் தொடர்ந்து பேசிவருவதால் ஊரின் முக்கியப் பிரமுகர்களின் கோபத்துக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. எனவே இஸ்லாமியப் பிரச்சாரத்தை விட்டுவிடுவீராக!'' என்று நல்லார் அபூதாலிப் கூறினார்.

இதைக் கேட்ட தூது வந்த வீரர் நாயகம் முஹம்மது நபி அவர்கள் -

*''வலக்கையிலே சூரியனும் இடது கையில்*
*வட்டநிலா வும்தரினும் நெஞ்சில் ஆசைக்*
*கலக்கமுறேன்! குறிக்கோளை, கொள்கை தன்னைக்*
*கைவிடவும் போவதில்லை! உலகில் முன்னால்*
*துவக்கமுற நிற்கையிலும் நடக்கும் போதும்*
*துயில்கையிலும் என்றெந்தப் போதும் - வெற்றி*
*முழக்கமுறக் கொள்கைக்கே உழைப்பேன்''*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று உறுதிபட விடையிறுத்தார்.★

## நபிகளின் நகரம் (யத்ரிப்) நோக்கி...

நாயகர் முஹம்மது நபி அவர்கள் தம்முடைய தூதுவத் தொண்டூழியத்தை மேற்கொண்ட பதின்மூன்றாம் ஆண்டு - அவருடைய பகைவர்கள் எல்லாம் அவருக்கு எதிராக ஒருங்கிணைந்து பொறுக்கியெடுக்கப்பட்ட நாற்பது பேர் கொண்டு குழு ஒன்றை அமைத்து அவருடைய உயிரை வாங்கக் காத்திருந்தனர். இனியும் மக்காவில் தொடர்ந்து இருப்பது அவருக்கு இயலக் கூடியதாகத் தோன்றவில்லை. ஆகவே அவர் யத்ரிப் என்று அழைக்கப்பட்ட நகருக்கு கிளம்பினார். அங்கே அவருடைய கொள்கைளைப் பின்பற்றும் சிலரை முன்னதாகவே பெற்றிருந்தார்.

அந்த நகரம் இப்பொழுது 'மதீனா - மதீனத்துந் நபி - நபியின் நகரம்' என அழைக்கப்படுகிறது. மக்காவில் இருந்து இருநூறு கல் தொலைவில் அந்த நகரம் இருக்கிறது. பாறைகளும் பாலைவனங்களும் நிறைந்த அந்தப் பகுதியைக் கடந்து செல்லுதல் அவ்வளவு எளிதல்ல. எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு அங்கே சென்ற அவருக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அறபு உலகம் அன்னார் மக்கா விட்டு மதீனா சென்ற ஆண்டிலிருந்து தங்கள் சகாப்தத்தைக் கணக்கிடுகின்றனர். இந்த நிகழ்ச்சியை ***'ஹிஜ்ரா'*** என்று அழைக்கின்றனர். கிறிஸ்துவ சகாப்தக் கணக்குப்படி ஹிஜ்ரத் நடந்த ஆண்டு கி.பி.622 ஆகும். அவருக்கு அப்போது வயது ஐம்பத்தி மூன்று.

இப்பொழுது அவர் முதுமை அடைந்து கொண்டிருந்தார். அவரைச் சுற்றி இருந்த நண்பர்கள் ஒருவர்பின் ஒருவராக மறைந்து கொண்டிருந்தனர். அவருடைய மார்க்கம் ஆதரவு குறைந்ததாகவும் ஆபத்துக்களால் சூழப்பட்டதாகவும் இருந்தது. இவர் தமக்குத்தாமே நம்பிக்கையூட்டிக் கொண்டால்

★ ('அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அழகிய முன்மாதிரி' என்ற தலைப்பில், தாமஸ் கார்லைல் கருத்திற்குக் கட்டியம்கூறி 1976-ல் ஏம்பல் தஜம்முல் முகம்மது எழுதிய கவிதையின் ஒரு பகுதி)



ஒழிய புற உலக நிலைமைகள் அவருக்கு நம்பிக்கை அற்றவையான இருந்தன. அவரைப் போன்ற சீர்த்திருத்தக் காரர்கள் அனைவரின் நிலையும் அவ்வாறுதான் இருந்தது.

இத்தகைய நிலைமைகள் ஏற்பட்டதற்குப் பிறகு அவர் பத்தாண்டுகளே இருந்தார். அருகே கால கட்டத்தில் ஓய்வில்லாத உணர்ச்சிமிக்க போராட்டங்களும், இன்னல் களும் கடினமான உழைப்பும் தான் அவர் வாழ்வில் நிறைந்து இருந்தன. அவற்றின் விளைவுகளை நாம் நன்கு அறிவோம். இறைத்தூதர் முஹம்மது அவர்கள், இஸ்லாம் மார்க்கத்தை வாள்மூலம் பரப்பினார் என்று மிகைப்படுத்திப் பேசப்படு கிறது.

## வன்முறையும் மென்முறையும்

இருப்பினும், கிறிஸ்தவ மதம் வாளை வெறுத்துப் புறக்கணித்தது என்று சொல்லிவிட முடியாது. ஷார்ல்மேன் சாக்சானியர்களை மதமாற்றம் செய்தது வாளைப் பயன்படுத்தி வன்முறையின் மூலம்தான். ஆகவே, இந்த வாளைப் பயன்படுத்தும் செய்திக்கு நான் அதிக முக்கியத்தவம் அளிக்க விரும்பவில்லை, என்னைக் பொறுத்தவரை, உண்மையை மென்முறையின் மூலமோ. வன்முறையின் மூலமோ பிரச்சாரம் செய்வதில் தவறு இல்லை. ஆகவே அந்தப் புதுக் கொள்கை யானது போராடி வளர வாளையோ அல்லது நாவையோ பயன்படுத்த அனுமதிக்கலாம்.

அவர் பேச்சுக்கலை பயின்றவர் அல்லர், இருபத்து மூன்றாண்டுகள் கொண்ட ஒரு காலகட்டத்தில் போராட்டங் களில் முழுமையாக ஈடுபட்டிருந்த ஓர் உலகின் மையப்புள்ளி யாக முஹம்மது அவர்களை நாம் கருதவேண்டும். குறைஷி களுடனும் சமய நம்பிக்கை அற்றவர்களுடனும் போர்கள் ; தம் இனத்தோரிடையே சண்டை சச்சரவுகள்; தம் அழைப்பை மக்கள் ஏற்காததால் அவ்வப்போது அவருக்கு ஏற்படும் ஏமாற்றங்கள், மன உளைச்சல்கள் எல்லாம் சேர்ந்து அமைதி என்பதையே அவருடைய ஆன்மா அறியாத வண்ணம் தொடர்ந்து சிக்கலான சூழ்நிலைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு ஓய்வு என்பது என்னவென்றே தெரியவில்லை. விழித்திருக்கும் இரவுகளில் இந்தச் சுழற்காற்றில் சிக்கி அந்த ஆன்மா என்ன பாடுபட்டு இருக்க வேண்டும் என்று நாம் எண்ணிப் பார்க்கலாம். அத்தகைய சூழல்களில்தான் எந்த முடிவையும் இறைவன் முடிவாக அந்த மனிதர் ஏற்றுக் கொண்டார். தம்முடைய சூழ்நிலைக்கு இன்றியமையாத எந்த முடிவையும் இறையருள் பெற்றதாக, ஜிப்ராயீலின் (வானவத் தூதர்) உந்துதலாக, சொர்க்க ஒளியாக அவர் ஏற்றுக் கொண்டார். இந்த நிலையில் அந்த ஆன்மா பல இரவுகளை உறக்கமின்றியே கழித்திருக்கிறது.

அவருடைய மனதுக்கு நிறைவளிக்கும் தீர்ப்புகள் இறையருளால் ஜிப்ராயீல் வழியாகத் தம்மை வந்தடைந்ததாகக் கண்டார்.

## போலியானவரா, செப்படி வித்தைக்காரா?

அவர் போலியானவரா? செப்படி வித்தைக்காரா?

இல்லை, இல்லை! துடித்துக் கொண்டிருந்த மகத்தான கருத்துக்களின் உலைக்களமாகக் களன்று கொண்டிருந்த அவருடைய செயல்கள் வித்தைக்காரனுடையது அல்ல. அவருடைய வாழ்வே அவருக்கு ஓர் உண்மை. அவரை அப்படித்தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவரை ஓர் இழிந்த. போலித்தனம் கொண்ட பெரும் பேராசையுடன் ஏமாற்றும் ஒரு பேர்வழியாக -

உயர் பண்புகளைத் துறந்து பெறப்படும் பொதுவகை இன்பங்களுக்காகப் பேசி ஏய்க்கும் பழக்கம் உள்ளவராக -

தாம் புகழ்பெற வேண்டும் என்பதற்காகத் திருக்குர்ஆனைத் தெய்வீக ஆதார மூலம் என்று சொல்லி உலகை ஏமாற்றுபவராக-

தமக்கும் உலகைப் படைத்த இறைவனுக்கும் எதிராக உயர்ந்தபட்ச தண்டனைக்குரிய குற்றம் புரியவராக நாம் கொள்ளக்கூடாது ! கொள்ள முடியாது என்று உறுதியாக உரைக்கிறேன்.



## அவர் சிற்றின்பப் பிரியரல்லர்!

நாயகம் முஹம்மது நபி அவர்களைப் பற்றி இவ்வளவும் சொன்னதற்குப் பிறகு இன்னொன்றையும் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.

அவர் சிற்றின்ப விருப்பம் மிகுந்தவர் அல்லர்.

அவர் சிற்றின்ப விருப்பம் மிகுந்தவர் என்றோ, அல்லது வேறு சுகங்களில் நாட்டம் கொண்டவர் என்றோ அவரைப் பற்றிக் கருதினால் நாம் பெருந்தவறு செய்தவர்கள் ஆவோம்.

அவருடைய குடும்ப வாழ்க்கை மிகமிகச் செட்டானது; சாதாரணமாகப் ரொட்டியும் தண்ணீரும் தான் அவருடைய உணவு. சில சமயங்களில் மாதக் கணக்கில் அவர் வீட்டில் அடுப்பு எரிவதே இல்லை. அவர்தம் காலணிகளைத் தாமே பழுது பார்த்துக் கொள்வார். கிழிந்துபோன தம்முடைய ஆடையைத் தாமே தைத்து உடுத்திக் கொள்வார். அவர் எந்த வசதி வாய்ப்பும் இல்லாதவர்; மிகவும் கடினமாக உழைத்த ஏழை மனிதர். சாதாரண மக்கள் எதற்காக உழைக்கிறார்களோ, அதைப்பற்றி எல்லாம் (பணம் - வசதி - வளவாழ்வு பற்றி எல்லாம்) அவர் கவலைப்படாதவர். அவர் ஒரு கெட்ட மனிதர் அல்லர் என்பதை நான் சொல்லியாக வேண்டும். புலன்வழி இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பத்தை விடச் சிறந்துயர்ந்த பண்புகள் அவரிடம் இருந்தன.

அவருடைய கிழிந்த ஆடைகளை அவரே தைத்துக் கொண்டார்; அவருடைய காலணிகளை அவரே பழுதுபார்த்துக் கொண்டார்.

ஒட்டுப்போட்ட உடையணிந்த இந்த மனிதரின் உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டதைப்போல மணிமுடி தரித்த எந்த மன்னவனின் ஆணைகளும் நிறைவேற்றப்பட்டதில்லை.

சோதனைக் காலமான இந்த இருபத்து மூன்று ஆண்டு கால வரலாற்றை ஆராய்ந்து பார்த்ததில் உண்மையான வீரருக்கு உரிய - நாயகருக்கு உரிய - சிறப்புகள் இவரிடம் எந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்கும் இடமில்லாத நிலையில் இருப்பதைக் காண்கிறேன்.

### போதனைகள் பொருளற்றவை ஆகா

முஹம்மது நபி அவர்களின் போதனைகள் பொருளற்றவை என்றோ, பகட்டு ஆரவாரத் தன்மை கொண்டவை என்றோ நாம் கருதுவது அறிவுடைமை ஆகாது.

தம்முடைய முன்னேற்றத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் சூழ்ச்சி செய்து மக்களை ஏமாற்றும் சதியாளர் என்றும் கருதக்கூடாது.

அவர் மக்களுக்கு அளித்த சூதுவாதில்லாத செய்தி உண்மையான ஒன்றாகும்.

இந்த மனிதரின் சொற்கள் பொய்யானவை அல்ல. அவருடைய செயல்கள் இவ்வுலகுடன் மட்டும் தொடர்புடையவை அல்ல. அவருடைய பேச்சு வஞ்சிக்கக் கூடியவை அல்ல.

(புதுக்கோட்டை நியுலைட் புக்ஸ் கார்னர் என்ற **பதிப்பகம் 1994**ல், ஏம்பல் தஜம்முல் முகம்மது அவர்களைப் பதிப்பாசிரியராகவும், ஈ.ரஹீம் அவர்களை மொழிபெயர்ப்பாளராகவும் கொண்டு வெளியிட்ட **''தூது வத்த வீரர்''** என்ற நூலின் சில பகுதிகளை அனுமதி பெற்று நன்றி பகர்ந்து பிரசுரம்.)





# வில்லியம் முய்ர்
## வண்ண மலர்கள்

உலகில் நான் பவ்வித்மான வழிகாட்டிகளைப்பற்றி ஆய்ந்தறிந்து உள்ளேன் ஆனால், அவர்களிலெல்லாம் மிக்குயர்ந்தவராக முஹம்மது நபியை காண்கின்றேன்.

ஏனெனில், இதுவரை அவரைப்பற்றி எனக்குத் தெரிந்த வரையில் உலகில் பல மொழிகளிலும் பல காவியங்கள் புனையப்பட்டுள்ளன. ஆனால் இத்தோடு அது நின்றுவிடும் என்று என்னால் எண்ண முடியவில்லை.

களங்கமற்ற உள்ளமும் விரும்பத்தக்க குணமும் வாய்க்கப் பெற்றவராய், தனித்திருக்கும் சுபாவமும், தியானத்துள் மூழ்கும் இயற்கையுணர்வும் நிரம்பப் பெற்றவராய், அவர் அநேகமாய்த் தம்மைத்தாமே சிந்தனைக்குள்ளாக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

பிறர் சோலியில் தலையிடாதிருந்து வந்த இந்த வாலிபரிடம் காணப்பட்டுவந்த நேர்த்தியான குணாதிசயமும், கண்ணியம் வாய்ந்த நல்ல நடவடிக்கையும் இவருடைய சகபாடிகளான உள்ளூர் வாசிகளின் மெச்சுதலைப் பெற்றுக்கொண்டு விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, அவர்களெல்லாருடைய ஏகோபித்த ஆமோதிப்பின் மீது அன்னவர் அல் அமீன் - நம்பிக்கைக்குரியவர் -என்னும் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு விட்டார்.

முஹம்மத் ஒருபொழுதும் செல்வஞ் சேகரிப்பதில் பேராசை மிக்கவராய் இருந்து வந்ததில்லை ; அதாவது தமது வாணாளில் எக்காலத்திலுமே, செல்வத்தின் பெருமையை யுன்னி அதனை அதிகம் திரட்டத் துணிந்தனரில்லை.

குறைஷிகளால் அவருக்கு இழைக்கப்படும் துன்பங்களைச் சகிக்கமாட்டாத அபூதாலிப், முஹம்மதிடம் அவருடைய பிரசாரத்தைச் செய்யவேண்டாமென்று வேண்டிக் கொண்டார்.

ஆனால் அவரோ, "நான் சொல்வதை மறுப்பவர்கள், என் வலக்கரத்தில் சூரியனையும், இடக்கரத்தில் சந்திரனையும் கொணர்ந்து வைத்து, என்னுடைய உண்மையான பிரசாரத்தைப் பண்ணவேண்டாமென்று சொன்னாலும் யான் இதை விட்டுவிடப் போவதில்லை. யான் அதில் வெற்றி அடைவேன்; அல்லது இவ்விஷயத்திலேயே மரணமடைவேன்.." என்று கூறினார்கள்.

சர்வ சக்தியும் படைத்த இறைவன் தனக்குத் துணையாக இருக்கிறான் என்ற நம்பிக்கை நபிகள் நாயகம் அவர்களுக்கு இல்லாதிருந்தால், இவ்வளவு பிரமாண்டமான சாதனைகளை அவர் சாதித்திருக்க முடியாது.

*(முன்னோடி முஸ்லிம் இதழாளர், முதுபெரும் பன்னூலாசிரியர் அல்ஹாஜ் பா. தாவூத்ஷா தனக்கேயுரிய தனி நடையில் 1941களில் வழங்கிய தமிழ் வடிவத்தின் ஒரு சிறுபகுதி, வில்லியம் முயீர் ஒரு வரலாற்றாய்வாளராவார்.)*





# எட்வர்ட் கிப்பன் ஜாதிமல்லி

நபி முஹம்மதின் மார்க்கம் சந்தேகமற்றதாகவும், கொள்கையில் தெளிவுள்ளதாகவும் இருக்கிறது. ஏக தெய்வக் கொள்கைக்கு ஓர் இணையற்ற அத்தாட்சியாக குர்ஆன் விளங்குகிறது.

இந்த மக்கத்து நபி, விக்ரக வணக்கத்தையும், ஜோதிடர்களையும், குறி சொல்லுவோரையும் புறக்கணித்து விட்டார்கள். அதாவது உதயமாவதெல்லாம் மறையவே வேண்டும், பிறப்பதெல்லாம் இறந்தே போகும், ஒழுக்கங்கெட்டதெல்லாம் இழிந்து போகும் என்ற பகுத்தறிவின் அடிப்படையில் அவர்தம் கொள்கைகள் அமைந்திருந்தன.

இயற்கையின் இறைவன் தனது சிருஷ்டிப் பொருள்களி லெல்லாம் அவனது உண்மையை எழுதி வைத்துள்ளான். மனிதனின் இதயத்திலே இறைவன் தனது சட்டத்தையும் வரைந்து வைத்திருக்கிறான்.

கிறிஸ்துவ மதம் மீது முஸ்லிம்கள் அதிக கண்ணியமும், மரியாதையும் செலுத்தமாறு திருநபியினால் அறிவுறுத்தப் பட்டுகின்றது.

முஹம்மதின் உபதேசங்களில் சத்தியத்தைப் பற்றி எண்ணிறந்த பாடங்கள் இருந்தன. அவர்தம் செயல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ நல்லொழுக்கங்களுக்கு உதாரணங்களாய் விளங்கின.

வீட்டிலும், வெளியிலும் அவர் கூறிய பொன்மொழிகள் அவர்தம் மனைவிகளாலும், தோழர்களாலும் பாதுகாக்கப் பட்டன,

இருநூறு ஆண்டுகள் சென்றபின் 'ஸுன்னா' (ஹதீஸ்) என்னும் வாய்மொழிச் சட்டம் ஒழுங்குப்படுத்தப்பட்டு நடைமுறையில் வந்தது.

இவை- *'அல்-புகாரி'* என்பவரின் பெருமுயற்சியால் எழுதி வைக்கப்பட்டன.

("Decline and fall of the Roman Empire" என்ற நூலில் இருந்து.)





# மைக்கேல் ஹெச் ஹார்ட் மல்லிகை!

*(நபி(ஸல்) அவர்களை முதன்மைப்படுத்தித் தமது நூலில் பதிப்பித்தவர்!)*

இந்த உலகத்தில் அளப்பரிய செல்வாக்குடன் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியவர்களின் பட்டியலில் முஹம்மது அவர்களை முதலாமவராக நான் தேர்ந்தெடுத்தது வாசகர்களில் சிலருக்கு வியப்பாக இருக்கும்; மற்றும் சிலர் 'ஏன் அப்படி?' என்று வினாவும் தொடுக்கலாம்.

ஆனால், சமயம், உலகியல் ஆகிய இரு நிலைகளிலும் ஒருசேர மகத்தான வெற்றி பெற்றவர் வரலாற்றில் அவர் ஒருவரே தாம்.

எளிமையான வாழ்க்கைப்பாதையில் ஏறத் துவங்கிய அன்னார் உலகத்தின் பெரும் மதங்களில் ஒன்றை நிறுவி, அதனைப் பரப்பிய பேராற்றல் வாய்ந்த தலைவருமாவார்கள். அவர்கள் உயிர் நீத்து பதிமூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அவர்களின் தாக்கம் சக்தி மிக்கதும், எல்லாத் துறைகளிலும் பரவி நிற்பதுமாக இன்னும் விளங்குகிறது.

அப்போது மக்காவில் மிகக் குறைந்த எண்ணிக்கையுடை யோராய் யூதர்களும், கிறிஸ்தவர்களும் இருந்தனர். அவர்களிடமிருந்தே பிரபஞ்சம் முழுமையும் ஆளுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து வல்லமையுள்ள ஏக இறைவனைப் பற்றி முஹம்மது முதலில் அறியலானார்கள் என்பதில் ஐயமில்லை.

அவர்களுக்கு நாற்பது வயதான போது, உண்மையாக ஏக இறைவன் - அல்லாஹ் - தம்முடைய பேசுகிறான் என்றும், சத்தியத்தைப் பரப்புவதற்குத் தம்மைத் தேர்ந்தெடுத்திருக் கின்றான் என்றும் உறுதியான நம்பிக்கை கொண்டார்கள்.

(இதன் பின்) மூன்றாண்டு காலம் முஹம்மது தம் நெருங்கிய தோழர்களுக்கும், துணைவர்களுக்கு மட்டுமே, போதனை செய்தார்கள். பின் -சுமார்613ஆம் ஆண்டிலிருந்து, -பகிரங்கமாக போதனை செய்யலானார்கள்.

சிறுகச் சிறுக தம் கொள்கையை ஏற்கும் ஆதரவாளர்களை அவர்கள் பெறத் துவங்கவே, மக்காவின் அதிகார வர்க்கத்தினர் அன்னாரை அபாயகரமானவராக, தொல்லை தரும் ஒருவராகக் கருதலானார்கள்.

கி.பி.622ஆம் ஆண்டில், தம் நலனுக்குப் பாதுகாப்பில்லை எனக் கருதி, மக்காவுக்கு வடக்கே சுமார் இருநூறு கல்தொலைவிலுள்ள மதீனா (யத்ரிப்) நகருக்கு ஏகினார்கள்; அங்கு அவர்களுக்குக் கணிசமான அரசியல் வல்லமையுள்ள பதவி கிட்டிற்று.

*'ஹிஜ்ரத்'* என்ற அந்த நிகழ்ச்சிதான் நபிகளின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. மக்காவில் அவர்களைப் பின்பற்றியோர் மிகச் சிலரே இருந்தனர்; ஆனால் மதீனாவிலோ ஆதரவாளர்களைப் பெறலானார்கள்; இதனால் அவர்கள் பெற்றுக் கொண்ட செல்வாக்கு ஏறத்தாழ எல்லா அதிகாரங்களையும் கொண்ட ஒரு தலைவராக்கிற்று.

இறுதியில் 630ஆம் ஆண்டில் முஹம்மது, மாபெரும் வெற்றியாளராக மக்காவுக்குள் திரும்பி வந்ததும், அறபுக் கோத்திரங்கள், இப்புதிய மார்க்கத்துக்கு விரைந்து வந்து அதனை ஏற்று கொள்வதை, முஹம்மது அவர்களின் வாழ்வின் எஞ்சிய இரண்டரை ஆண்டுகளும் கண்டன.



அவர்கள் 632ஆம் ஆண்டில் காலமானபோது தென் அறேபியா முழுவதிலும் பேராற்றல் கொண்ட ஆட்சியாளராக விளங்கினார்கள்.

ஏனைய சமயங்களை போன்றே இஸ்லாமும் அதனைப் பின்பற்றுவோரின் வாழ்க்கைகளில் மிகப் பெருந் தாக்கத்தை உண்டு பண்ணி, ஆதிக்கம் செலுத்துகின்றது. உலகத்தில் முஸ்லிம்களை விடக் கிறிஸ்தவர்கள் ஏறத்தாழ இருமடங்கினராக இருப்பினும்கூட, முஹம்மது நபியவர்களை ஏசுநாதரை விட முதன்மையாக (இந்நூலில்) இடம்பெறச் செய்திருப்பது எடுத்த எடுப்பில் புதுமையாகத் தோன்றலாம்.

இந்த முடிவுக்கு இரண்டு காரணங்களுண்டு, ஒன்று: கிறித்துவ வளர்ச்சிக்கு ஏசுநாதர் ஆற்றிய பணியைவிட இஸ்லாமிய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணியினை முஹம்மது நபியவர்கள் ஆற்றினார்கள்.

கிறித்துவத்தின் முக்கியமான அறநெறி, ஒழுக்க இயல் ஆகியவற்றுக்கு (அவை யூத சமயத்திலிருந்து வேறுபட்ட அம்சங்களைப் பொறுத்தவரை) ஏசுநாதரே காரணமாக இருந்தாலும், அதன் இறையியலை (Theology) உருவாக்கியதில் முதன்மையானவரும், அதன்பால் மக்கள் வருவதற்கு முக்கிய காரணமாக இருந்தவரும், புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதியின் ஆசிரியருமான செயின்ட் போல் தான். (ST.PAUL)

ஆனால், இஸ்லாத்தின் இறைமையில் (Theology), அதன் அறநெறி, ஒழுக்க இயல் யாவற்றுக்குமே பொறுப்பானவர் முஹம்மது நபிதான்.

அன்றியும், அச்சமயத்தை மக்களிடையே பரப்புவதிலும் இஸ்லாமிய அனுஷ்டான மரபுகளை வகுப்பதிலும் அவர்கள் மூலாதாரமான பொறுப்பினை மேற்கொண்டிருந்தார்கள்.

மேலும்,இறைவனிடமிருந்து தங்களுக்கு நேரடியாய் அருளப்பட்டதாக அவர்கள் நம்பிய திருவெளிப்பாடான புனித குர்ஆனின் போதகரும் அவர்தாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மது வாழ்நாளிலேயே இவ்விறை வெளிப்பாடுகள் பற்றுறுதியுடனும். கடமையுணர்வுடனும். பதிவு செய்யப் பட்டன. அவர்கள் காலமான சிறிது காலத்துக்குள் ஆதாரப்பூர்வமாக அவை ஒருசேரத் தொகுக்கப்பட்டன.

எனவே, முஹம்மது நபியின் கருத்துக்களும், போதனை களும், கொள்கைளும் குர்ஆனுடன் நெருக்கமானவை.

ஆனால்,ஏசுநாதரின் இது போன்ற விரிவான போதனைகள் அடங்கிய எதுவும் (மூலாதாரத்துடன்) எஞ்சவில்லை.

குர்ஆன் வாயிலாக முஹம்மது நபி உண்டு பண்ணிய தாக்கம், மிகப்பெரும் அளவினதாகும். கிறித்தவத்தின் மீது ஏசுநாதரும். தூய பவுலும் (செயின்ட் போல்) ஒருங்கிணைந்து உண்டு பண்ணிய தாக்கத்தைவிட, முஹம்மது நபி இஸ்லாத்தின் மீது உண்டு பண்ணிய தாக்கம் மிகுந்ததே என்று சொல்லலாம்.

சமய அடிப்படையில் மட்டும் பார்க்கப்போனால் மனித வரலாற்றில் ஏசுநாதருக்கு இருந்த செல்வாக்கைப் போன்றே முஹம்மதுவுக்கும் இருந்தது என்று சொல்லலாம்.

இரண்டாவது:ஏசுநாதரைப் போலில்லாமல், முஹம்மது நபி சமயத் தலைவராக மட்டுமின்றி, உலகியல் துறைகளிலும் தலைவராக இருந்தார்கள். உண்மையில், அறபுகளின் வெற்றிகளுக்கு, பின்னிருந்து இயக்கிய உந்து சக்தியான அன்னார் எல்லாக் காலத்துக்கும் தாக்கத்தை உண்டு பண்ணும் செல்வாக்கு மிக்க தலைவராக இடம் பெறலாம்.

'புதிய வரலாறு படைத்தோர்' கிறித்துவும் மார்க்ஸும் அல்லர், முஹம்மது தான்!

*- நன்றி : கலைமாமணி மணவை முஸ்தஃபா அவர்கள் பதிப்பித்த "100 பேர்"*



*ரெவரண்ட் மார்க்க - ஸ்டாஸ்*

## மலர்க்கொத்து

முஹம்மதென்பவர் ஒரு தீர்க்கதரிசியாய் இருப்பது முடியாதா?

நிச்சயமாகவே தீர்க்கதரிசிகள் பால் காணப்படக்கூடிய அதிமுக்கியமான இருவகைக் குணவிசேடங்களை அன்னவர் பெற்றிருந்தார்.

அவருடைய சகோதர மக்களால் கண்டுகொள்ள முடியா திருந்த தெய்வத்தின் உண்மையினை அவர் கண்டு கொண்டார்.

அது மட்டுமின்றி, அந்த உண்மையினைப் பகிரங்கப் படுத்தும் உத்வேகம் இருந்து கொண்டேயிருந்தது.

சத்தியத்தின் பொருட்டே அவர் தமது உயிருக்கு அபாயத்தைத் தேடிக் கொள்பவராய்க் காணப்பட்டு வந்தார்; பல ஆண்டுகள் வரை அவர் ஒவ்வொரு நாளும் துன்புறுத்தப் பட்டே வந்து, இறுதியில் நாடும் கடத்தப்பட்டார்.

சொத்துப் பறிமுதல், சோதர மக்களின் நல்லெண்ணத் தையிழத்தல், அவருடைய நண்பர்களின் நம்பிக்கையையுங் கூட இழத்தல் ஆகிய சங்கடங்களுக்குள்ளெல்லாம் ஆளாகி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருக்கிச் சொல்லுமிடத்து, அன்னவர் மரணம் ஒன்றைத் தவிர்த்து மற்றெல்லாக் கஷ்டங்களையும் பட்டுவந்தார்.

மரணத்திணையும் கூட அவர் ஊரைவிட்டோடிய தனாலேயே தவிர்த்துக் கொண்டார். ஆயினும், அவர் சற்றும் மனந்தளராமல் தம்முடைய உபதேசத்தைப் புரிந்து கொண்டே சென்றார்.

எத்தகைய இலஞ்சமேனும், எத்தகைய பயமுறுத்தாட்டலேனும், எத்தகைய ஆசை வார்த்தையேனும் அன்னவரை அடக்கிவிடத் துணியவில்லை.

பேருண்மை எதுவோ அதில் மக்கள் நன்னம்பிக்கை கொள்ள வேண்டுமென்று அவர் கொண்டிருந்த அந்தத் தீவிரம் அவரை தீவிரப்பிரசாரகராகச் செய்துவிட்டது!

தம் சுகத்தையும் வசதியான வசிப்பிடத்தையும், அருமை அருமையான இல்லக் கிழத்தியையும் துறந்து ஹிரா என்ற பயங்கரக் குகையுள்ளே வாசஸ்தலத்தை ஏற்படுத்தி ஆண்டவனது உண்மைகளை ஆராய விடுத்த நன்னோக்கினை யாரும் மிக இலகுவாக எடைபோட்டு விடவாகாது.

-(இக்கருத்துரைகளுக்கு வயது, 70க்கு மேல்)





# ரெவரண்ட் ஸ்டீபன்ஸ் இரத்தின மாலை!

முஹம்மதின் காலத்தில் அறபு நாட்டில் அதிகம் காணப்பட்டு வந்த ஒழுங்கீனங்கள் பற்பல. குர்ஆன் வேதத்தால் மிகக் கடுமையான தடுக்கப்பட்ட மதுபானம், வியபிசாரம்,பலதார மணம்,பெண் சிசுக்களைக் கொல்லல், எல்லையில்லாது சூதாடுதல்,வட்டி வாங்குதல்,குறி பார்த்தல், ஜோதிடம் கேட்டல் ஆகியவைகளே யாம்.

இத்தகைய கொடிய பழக்கங்களில் சிலவற்றை ஒழித்து விட்டதும், மற்றவற்றை மிதப்படுத்தியதும் அரேபியரின் ஒழுக்கத்தை அதிகம் அபிவிருத்தி செய்ததேயாகும். இதுவே அந்தச் சீர்திருத்தக்காரனின் உற்சாகத்தையும்,செல்வாக்கையும் நிருபிப்பதற்குரிய ஆச்சரியமானதும், கண்ணியம் வாய்ந்தது மான சாட்சியமாக காணப்படுகிறது.

பெண் குழந்தைகளைக் கொல்லாமல் அடியோடு நிறுத்தி விட்டதும், மதுபானத்தையும் அவ்வாறே ஒழித்துவிட்டதுமே அவருடைய சாதனையின் மகா பிரசித்திபெற்ற வெற்றிகளாய் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாக முஹம்மது நபி (ஸல்) தம் சொந்த ஜனங்களுக்கே ஒரு மாபெரிய பேருபகாரியாய் விளங்கி வந்தாரென்பது சர்வ தாராளமாய் ஒத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

அவர் ஒருவரே தமது மேலான அறிவு விவேகத்தினால் ஒரே மூச்சில் தன் தேசத்தினுடைய அரசியல் வாழ்வையும் மதக்கொள்கைகளையும், ஒழுக்க நடத்தைகளையும் சீர்திருத்தஞ் செய்தார்.

அனேக சுயேச்சையான உட்பிரிவினர் பெருகிக் கிடந்த அத்தேசத்தில் அவர் அவர்களை ஒரே சமூகமாக நிலை நிறுத்தி வைத்தார்.

எண்ணற்ற கடவுளிடத்தும் கணக்கற்ற தலைவரிடத்தும் பாராட்டப்பட்டு வந்த ஒருவகை மூடக்கொள்கை இருந்த இடத்தில், எல்லாம் வல்ல ஒரே இறைவனிடத்தில் நம்பிக்கை வைக்கக்கூடிய பகுத்தறிவுகேற்ற மார்க்கத்தை ஏற்படுத்தி வைத்தார்.

அத்தகைய கடவுளின் மேற்பார்வைக்குரிய கருணையின் கீழே எப்பொழுதும் வாழ்ந்து வருமாறும், அவனையே சன்மானத்துக்குரிய எஜமானனென்று கருதுமாறும், அவனே தீயவர்களை தண்டிக்கக்கூடியவன் என்று அஞ்சிக் கொள்ளுமாறும் மனிதர்களுக்கு கற்பித்துக் கொடுத்தார்.

அவருடைய காலம் வரை அறபு நாட்டில் தழைத்தோங்கி வந்த அனேகவிதமான அநாகரீகமான, அருவருக்கத்தக்க தீய வழக்கங்களை எல்லாம் அவர் ஒடுக்கி வைத்தார்.

கண் மூடித்தனமாக அங்கே நடைபெற்று வந்த வியபிசார வாழ்க்கையின் இடத்தில் சர்வ ஜாக்கிரதையுடன் ஒழுங்கு படுத்தப்பட்ட நான்கு தார மணத்தை நிலை நிறுத்தினார்.




மேலும், பெண் சிசுக்களை உயிருடன் புதைத்தல் எனும் கொடிய பழக்கமும் அறவே ஒழிக்கப்பட்டது.

*- (இக்குறிப்புகள் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் தெரிவிக்கப்பட்டவை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமின்னும்
இவ்வையத்துப்
பெருமக்களின்
பூ மழை!
–எதிர்ப்பக்கங்களில்...







## இன்னுமின்னும் இவ்வையத்துப் பெருமக்களின் பூ மழை!

"உண்மையில் ஹஸரத் முஹம்மத் நபிகள் நாயகம் (ஸஸ்) ஒரு சிறந்த மதத் தலைவராகவும், சமூகப் பெரியாராகவும், ஒப்பற்ற அரசராகவும் இணையிலா ராணுவ தந்திரியாகவும், யுத்த வீரராகவும், சாந்த சொரூபியாகவும், குதிரைச்சவாரியில் சிறந்த வீரராகவும், சத்தியாக்கிரஹியாகவும் மற்றுமுள்ள எல்லாத் துறைகளிலும் நிகரற்ற பெரியாராகவும் வாழ்ந்திருக்கிறார்கள். முஹம்மத் (ஸஸ்) அவர்களுக்கு நிகரான ஒருவர் இதுவரை இம்மண்ணுலகில் அவதரித்ததில்லை.

"முஹம்மது நபி ஒருவர் தாம் உண்மையான தீர்க்கதரிசி, எப்படியெனில் இவர் உலகத்துக்கே பொதுவான ஒரு மதத்தைப் போதித்தார். மனிதனை புனிதனாக்கும் முயற்சியில் அந்த மகான் பெற்ற மகத்தான மாபெரும் வெற்றிக்கு உலக வரலாற்றிலேயே ஈடு இணை கிடையாது.

"முஹம்மது நபியைப் பற்றி நான் ஆராயுங்கால் மிகவும் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. நாகரிகம் முற்றிய இக்காலத்தில்கூட நாம் மக்களை சீர்திருத்தப் படும் அவதி களை பார்க்கும்போது பல நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன் அனாச்சாரத்திலும், அநாகரிகத்திலும் திளைத்த மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலே முஹம்மது நபி (ஸல்) செய்த சீர்திருத்தங்களும், அஹிம்சையையும் சகிப்புத் தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் முரடர்களுக்கும் போதித்து அவர்களை உண்மையான வாழ்விற்பால் இழுத்துச் சென்று விட்டது. அவை வெறும் நாவினால் புகழ்ந்துவிடக்கூடியதல்ல. ஒரு தனிப்பட்ட மனிதன் இத்தகையப் பெரும் பெரும் காரியங்களை சாதித்துவிட்டாரென்றால் உண்மையில் உலகம் அவர் வெற்றியைக் கண்டு பணிந்து மரியாதை செய்ய வேண்டியதுதான் நியாயம்.''

*- ரஷ்ய அறிஞர் லியோ டால்ஸ்டாய்*

''வரலாற்றில் ஒரு புதுமையாக மூன்று சாதனைகளை முஹம்மது நபி புரிந்தார். ஓர் இனம், ஒரு சாம்ராஜ்யம், ஒரு சமயம்'' ஆகியவையே அவை.

அரசின் தலைவராகவும், மதவிவகாரத் தலைவராகவும் இருந்த அன்னவர், ஏககாலத்தில் ஒரு 'சீஸர்'போலவும், ஒரு 'போப்பாண்டவர்' போலவும் விளங்கினார். என்றாலும், சீஸருக்குரிய சைன்யங்களோ, போப்புக்குரிய படாடோபங் களோ இல்லாத ஒரு சாமான்ய மனிதராக விளங்கி வந்தார். ஒரு நிரந்தரப்படையோ, மெய்க்காப்பாளர் எவருமோ இல்லை. அரண்மனை கிடையாது. அத்தகைய ஒருவர் அனைத்து அதிகாரங்களையும் செலுத்தினார். அவர் முஹம்மது ஒருவரே!

''தயார் நிலையிலுள்ள இராணுவமோ. நிலையான வருமானமோ இல்லாமல் மக்களின் உள்ளங்களையும் பெரும் நிலப்பரப்பையும் இறைவனின் இறைவாணையை, தெய்வீக அனுமதியை மட்டுமே துணையாகக் கொண்டு ஆட்சி புரிந்ததாகக் கூறிக்கொள்ளும் உரிமை, மனித வரலாற்றில் எவராவது ஒருவருக்கு இருக்குமானால், அவர் முஹம்மத் (ஸல்) அவர்களே ஆவார்.''

*-வரலாற்றாசிரியர் பாஸ்வொர்த் ஸ்மித்*

("Mohammed and Mohammadanism", London 1874, P.92)



''முகம்மது நபி ஒரு தத்துவ ஞானி. பேச்சாளர்; சட்டவியலாளர்; போராளி; பகுத்தறிவுக் கோட்பாடுகளையும் நிலைகள் இல்லாத நாகரிகத்தையும் நிறுவியவர்; மனிதப் பெருந்தன்மையை அளக்கப்படும் சக நிறுவைகளையும் கொண்டு தீர்மானிக்கையில், நாம் 'அவரைவிடவும் ஒரு பெருந்தகை உள்ளாரா' எனக் கேட்கலாம்''

*- ஜெர்மானிய கவிஞர் கதே*

''முஹம்மது (ஸல்) அவர்கள் அன்றைய உலகின் மூன்றிலொரு நிலப்பரப்பில் வசித்து வந்த கோடிக் கணக்கான மக்களின் உள்ளங்களை ஈர்த்தார்கள்.

''...தத்துவப் போதகர், சொற்பொழிவாளர். இறைத்தூதர், சட்ட நிபுணர், மாபெரும் போர்வீரர், பகுத்தறிவுக் கொள்கைகளை நிலை நாட்டியவர், ஒரே ஆன்மீகத் தலைமையில் இருபது பேரரசுகளின் நிறுவனர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மட்டுந்தான்.

*- பிரெஞ்சுக் கவிஞர் லா மார்ட்டின்*

("La Martine Historie de la Turquir,Paris 1854, Vol.II P.276-277)

''நபிகள் நாயகத்தைக் காட்டிலும் அதிக ஆச்சரியம் தரக்கூடிய வாழ்கை முறை வரலாற்றிலே வேறெங்கும் இல்லை. அவரைப் போல் உலகத்தின் தவைவிதியில் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்திய மனிதர்களைக் காணுதலும் அரிது.''

*- ஈ.ஈ.கெல்லட்.*

''முகம்மது நபி அவர்கள் வறுமையுடன் இருந்த காலத்தில் எந்த விதமான எளிய வாழ்க்கையை நடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்களோ, அதுபோன்றே தாங்கள் அதிகார உச்சத்தை அடைந்து மாமன்னராகத் திகழ்ந்தபோதும் கூட எளிய சாதாரண வாழ்க்கையையே மேற்கொண்டார்கள். மற்றவர்கள் தங்களுக்கு அரசமரியாதை செலுத்துவதை அவர்கள் வெறுத்தார்கள்; கண்டித்தார்கள்.''

***- வரலாற்றாசிரியர் வாஷிங்டன் இர்விங்***

''இதுவரை அவரைப் பற்றி எனக்குத் தெரிந்த வரையில் உலகின் பல மொழிகளிலும் பல லட்சங்களுக்கும் மேற்பட்ட புகழாரங்கள் குவிந்துள்ளன. ஆனால் இத்தோடு அது நின்றுவிடும் என்று என்னால் எண்ண முடியவில்லை.

களங்கமற்ற உள்ளமும் விரும்பத்தக்க குணாதிசயமும் வாய்க்கப்பெற்றவராய், தனித்திருக்கும் சுபாவமும் வாய்க்கப் பெற்றவராய் இயற்கையுணர்வும் நிரம்பப் பெற்றவராய், அவர் அநேகமாய்த் தம்மைத்தாமே சிந்தனைக்குள்ளாக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

பிறர் சோலியில் தலையிடாதிருந்து வந்த இந்த வாலிபரிடம் காணப்பட்டுவந்த நேர்த்தியான குணாதிசயமும், கண்ணியம் வாய்ந்த நல்ல நடவடிக்கையும் இவருடைய சகபாடிகளான உள்ளூர் வாசிகளின் மெச்சுதலைப் பெற்றுக் கொண்டுவிட்டன.

***- வரலாற்றாய்வாளர் வில்லியம்***

''முகம்மது நபி அவர்கள் ஒரு சுயநலக்காரராக, புகழ் விரும்பியாக இருந்திருந்தால் இறைவனோடு தம்மையும் சேர்த்து வணங்கும்படி சொல்லியிருக்கலாம். ஆனால் அப்படிச் சொல்லாது இறைவனே ஏக தெய்வம், அவனையே வணங்க வேண்டும் என்று சொன்னார்.''

***- ஏ.சி.பொக்கே***



''முகம்மது நபி போதித்த இஸ்லாம் சமயத்தின் உயிர்நாடி, ஏக தெய்வக் கொள்கையாகும். இறைவனின் கட்டளைக்குச் செவிசாய்த்தல் அதன் இதயமாகும்.''

***- எட்வின் அர்னால்ட்***

''உலகத்திலுள்ள மிகப் பெரிய மனிதர்களுள் எல்லாம், மஹான் முஹம்மத் நபியே மனித வர்க்கத்தின் மீது மகத்தான செல்வாக்குப் பெற்றவராயிருந்திருக்கின்றார்.''

***- பேராசிரியர் டிரேப்பர்***

***('ஐரோப்பிய அறிவு வளர்ச்சியின் வரலாறு'*** -என்ற நூலிலிருந்து)

''அறம் செய்வது எப்படி என்பது பற்றித் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறிய ஒரு சட்ட மேதையாக விளங்குபவர் முஹம்மது நபி (ஸல்) அவர்களே!''

***- வரலாற்று ஆசிரியர் கிப்பன்***

''இந்த உலகில் எப்போதாவது ஒரு மனிதர் கடவுளைக் கண்டிருக்கின்றார் என்றால், எவராவது ஒருவர் தனது வாழ்நாளை அக்கடவுளின் திருப்பணியில் நல்ல எண்ணத்துடன் கழித்திருக்கின்றார் என்றால், அப்படிப் பட்டவர் அந்த அறேபியாவின் திரு நபியாகத்தான் இருக்க வேண்டும்.''

''மஹான் முஹம்மத் நபி மனித சமூகத்தில் தோன்றிய மக்களுள் மிகப் பெரியவர் மட்டுமல்ல, அவரைப்போன்ற உண்மையான மனிதரை இவ்வுலகம் இதுகாறும் கண்டதில்லை.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒரு சிறந்த கருத்து வைக்கோல் மீது விழுந்த சிறு பொறியைப் போன்றது. முஹம்மது நபியவர்களைப் பொறுத்தவரை இது முற்ற முற்ற உண்மை. இறைவனிட மிருந்து அந்தச் சிறு பொறி தெரித்தது. பணிவும் நேர்மையுமிக்க அந்த அறபு நாட்டு வணிகர் வைக்கோலாகப் புகைந்த பிறகு இறைவன் ஒரு பேரொளியையே பரத்திவிட்டான்.''

***- மேஜர் எ.ஜி.லியோனார்ட்***

***('இஸ்லாமும் அதன் தெய்வீக சக்தியும்' என்னும் நூலில்)***

''துவேசம் என்னும் கருமேகக் கூட்டத்தை விலக்கி விட்டு உண்மையென்னும் கதிரவன் ஒளிபரப்பும் நன்னாள் ஒன்று வரலாம்.அப்போது மேல் நாட்டு ஆசிரியர்கள், 'முகம்மது ஒரு பெரிய சரித்திர நாயகர்' என்று கூறுவதோடு, இப்போது நிறுத்திக் கொள்கிறார்களே, அப்படியின்றி, அதற்கப்பால் சென்று அவர்களுடைய வாழ்க்கையை அணுகி ஆராய்ந்து மனிதத்துவத்தில் வரலாறு என்ற பொன்னேடு களில் நபிகள் நாயகம் அவர்களுக்குரிய இடத்தை அளிப்பார்கள்.''

***- எஸ்.ஹெச். லீடர்***

''நான் மிக்க பயபக்தி விசுவாசத்துடனே இதைச் சொல்ல முன்வருகிறேன். உண்மையில் சகல நன்மைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள பரிசுத்த மேலான ஒரு மார்க்கம் ஆண்டவனிடமிருந்து வெளியாயிருக்கிறதென்றால் அது முஹம்மதுடைய மார்க்கமாகவே இருக்கிறது. பரோபகாரமும், நம்பிக்கைக்குரிய மனோ உறுதியும், நன்மை தீமையின் முழு ஆராய்ச்சியும், தீமையை விலக்கக் கூடிய நல்வழிகளுமே தெய்வீகத்துக்கு தக்க அடையாளங்களாய் இருக்கின்றன. முஹம்மதுடைய தூது தெய்வீகமானதென்பதில் சந்தேகமில்லை.''

***- டாக்டர் லட்டீஸ்***



''அறேபிய நபியின் சரிதையை -அவர்களது குணாதிசயங்களை -அவர்களது வாழ்க்கையை நாற்பது வருடமாக ஆராய்ந்து வருகிறேன். உலகம் இன்றுவரை கண்டிருக்கும் தலைவர்களில் இவர்கள் நிகரற்றவர் என்றே கூறவேண்டும்.''

***- ஜெனரல் பர்வாங்***

''தனக்குக் கிடைத்த அற்பமான வசதிகளைப் பயன்படுத்தி அவர்கள் ஆற்றிய தொண்டின் பரந்த-நிரந்தரத் தன்மையைக் கொண்டு கணிக்கும் போது, மக்க நபியின் பெயரைப் போல் ஒளி வீசும் பெயர் உலக வரலாற்றில் வேறில்லை எனலாம்.''

***- ஜேடபிள்யு ஹெச்.ஸ்டோபார்ட்***

''அவருடைய மார்க்கம் நடைமுறைக்கேற்றது. அது அவருடைய நல்லறிவையும் எடுத்துக்காட்டுகிறது. அடைய முடியாத குறிக்கோளையோ, குழம்பிய சித்தாந்தங்களையோ, மறைபொருளான தத்துவங்களையோ, குருமார்களின் ஆதிக்கங்களையோ அது கூறவில்லை.''

***- பேராசிரியர் பி.கே.ஹிட்டி***

''நபிகள் நாயகம் (ஹல்) அவர்கள் தம்மினும் தாழ்ந்தவர்களிடம் மிக்க அன்பாகவும், பண்பாகவும் நடந்து கொண்டார். குழந்தைகளிடம் அதிகம் பட்சமுள்ளவராய் இருப்பார். இவர் தமது வாழ்நாளில் ஒருவரையும் அடித்தது கிடையாது. ஒருவருக்கு சாபமிடும்படி கேட்டுக் கொள்ளப் பட்ட போது 'சாபமிடுவதற்காக அனுப்பப்பட வில்லை. மானிடர்களிடம் அன்பாக நடக்கவே அனுப்பப்பட்டேன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினார்.''

*- ஸ்டான்ஸி - லேன்புல் (சரித்திராசியர்)*

('Speech and Table Talks of Mohammed, *என்ற நூலில்)*

''குர்ஆனின் ஒவ்வொரு வாக்கிலும் சத்தியம் பிரதிபலிப்பதை என்னால் உணர முடிகின்றது. அதில் முஹம்மது நபி தனது சொந்தக் கருத்து எதனையும் செருகி இருக்க எவ்வித நியாயமுமில்லை. ஆதலால், குர்ஆனின் மூலம் மனித சமுதாயத்திற்குக் கிடைக்கும் வழிகாட்டுதலை மிஸ்டர் வான்மீர் என்பவரைப் போன்று நானும் 'மிகச் சிறந்த வழிகாட்டுதல்' என்று மனமாற ஒப்புக் கொள்கிறேன்''

*- ஹானரபில் வில்லியம்*

''நாயகம் கொண்டு வந்த இஸ்லாம். அனைத்தையும் உள்ளடக்கியது. அகிலமே ஏற்றுக் கொள்ளக் கூடியது. அண்ணல் நபியின் எளிய வாழ்க்கை அவருடைய மனிதத் தன்மையை தெளிவாக்கியுள்ளது.''

*- டாக்டர் ஜான்சன்*

''அறபிகள் பாரசீகத்தை வென்றதும், பாரசீகத்தவர்கள் பலர் தாமாக முன் வந்து இஸ்லாத்தைத் தழுவினர். இவர்களுடைய உள்ளங்களின் அதியற்புதப் பேரிலக்கியமாக அல்-குர்ஆன் மிகுந்த ஆதிக்கம் பெற்றது, அவ்வேதத்தின் தத்துவங்கள் இவர்களுடைய தனி, சமுதாய வார்ழ்கைகளில் எதிரொலிக்கலாயின. எதையுமே அவர்கள் அல்-குர்ஆனின் முன்னிலையிலேயே நிறுத்தி மதிப்பிடலாயினர். அல்குர்ஆன் உன்னதமான போக்கு, அதன் தெளிவான, துல்லியமான வாக்கியங்கள், ஓசை நயமிக்க பிரகடனம், கனறும் உணர்ச்சி, மகத்தான வீரியம், பளபளக்கும் விதமான பல்வகை உவமானங்கள், இன்பமூட்டும் தெளிவு -இவை யாவும் பாரசீகர் உள்ளங்களிலே மாபெரும் உணர்ச்சிகளை பாரசீகர் உள்ளங்களிலே மாபெரும் உணச்சிகளை உண்டாக்கின.''

*- பேராசிரியர் வைஸ்லால்*

''எம்மதத்தினரையும் இஸ்லாம் வரவேற்கிறது. வேதமருளப்பட்ட கிறிஸ்துவர், யூதர்களுடன் முஸ்லிம்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று பெருமானார் போதித்தார்கள்.''

*- ஜேம்ஸ் மிச்னர் ( எழுத்தாளர்)*

''நீதி நெறி வகுத்தவர்களிலும், வெற்றி பல குவித்தவர் களிலும் எவரது வரலாறும் இஸ்லாத்தின் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாறு போன்று விரிவானதாக, முற்றிலும் உண்மை பொழிந்ததாக இல்லை.

தமது நபிப்பட்டத்தை ஸ்தாபிப்பதற்காக ஒரு போதாவது தந்திர உபாயமெதையும் செய்தாரென்றும், பொய்யான அற்புதங்களைக் காட்டினாரென்றும் காண முடியவே இல்லை. கண்கள் கறுத்து ஒளியுமாயிருந்தவரும், நற்குணவானும், வனாந்திரவாசியுமான முஹம்மது நபி என்னும் அந்த மகா புத்திமானுக்கு துராசையும், வீணாசையும் ஒருபோதும் இருந்ததில்லை.''

*- ஜான் டெவன் போர்ட்*

*(நூல்: 'முஹம்மதிய்யா மகத்துவம்' - 3 வது அத்தியாயம்)*

''மனிதரில் புனிதராகக் கருதப்பட்ட எந்த மனிதருடைய வாழ்க்கையும், பெருமானாருடையதைப் போன்று இலட்சோப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்ச மக்களால் நுணுக்கமாகப் பின்பற்றப்படுவது கிடையாது.''

*- டி.ஜி.ஹோகார்த்*

‘‘முஹம்மத் அவர்களின் அன்பு எத்தகையது தெரியுமா? மற்றவர்களுடன் கை குலுக்கும் போது ஒருபோதும் இவர் தனது கையை முதலில் இழுத்துக் கொண்டதில்லை! குழந்தைகளிடம் குறைவிலாத அன்பு செலுத்தினார். சிறுவர்களின் கூட்டத்தைக் கடந்து செல்லும் போதெல்லாம் அவர்களை முக மலர்ச்சியுடன் பார்த்துப் புன் முறுவல் பூக்காமலும், பிரியமாகப் பேசாமலும் போகமாட்டார். அந்தப்பேச்சில்தான் என்ன இனிமை! அந்த இனிமையில் தான் என்ன அன்பு! அவரது அன்பும், தயையும், அசாதாரண தைரியமும், தன்னம்பிக்கையும் அவரிடம் குறைகாணுமாறு நம்மைத் தூண்டா. அதற்கு மாறாக அவரது புகழ் பாடவே நமக்கு ஆசையுண்டாகிறது!''

*- சரித்திராசியர் ஸ்டான்ஸி லேன்பூல்*

‘‘ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளில் நாகரிக உலகமானது அழிவின் எல்லையிலிருந்தது. ஏனெனில் அன்றைய நாகரிகத்தை உருவாக்கக் காரணமாக அமைந்த பண்பாட்டு நெறி முறைகள் அனைத்தும் ஏற்கனவே அழிந்துவிட்டன. அவற்றின் வெற்றிடத்தை நிரப்ப அங்கு எதுவுமே இருக்கவில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளின் உழைப்பின் சின்னமாக எழுந்த பெரு நாகரிகமானது வீழ்ச்சியினதும், அழிவினதும் எல்லைக் கோட்டை அண்மி, மனித இனமானது சட்டமும் ஒழுங்குமற்று ஒருவரையொருவர் கெடுத்தும், பழித்தும் சண்டையிட்டும் வாழும் பழைய காட்டுமிராண்டித்தன வாழ்வு நோக்கித் திரும்புவதற்கான அறிகுறிதென்பட்டது.

இத்தகையப் பெருஞ்சீர்கேடு பேயாட்டமாடிய அந்தச்



சூழ்நிலையில் தான் அனைத்து உலகையும் ஒன்றுபடுத்திய ஓர் அற்புத மனிதர் (முஹம்மது) பிறந்தார்.''

*- ஜே.எச்.டென்னிசன்*

*(‘உணர்வு; நாகரிகத்தின் அடிப்படை’ என்ற நூலில்)*

‘‘பகிரங்கமான எல்லா மார்க்கங்களின் விபரங்களையும் நான் படித்திருக்கிறேன். அதில் இஸ்லாம் மார்க்கம் மிக எளிதானதாகவும், நீதிகளை உடையதாகவும் இருக்கின்றது. அது மேலான பரிசுத்தமான ஆண்டவனுடைய அருட்கருத்துக் களை அதிகக் கஷ்டமில்லாமல் பரப்பிக் கொண்டுவருகின்றது. ‘லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்’ என்ற அதன் மூலமந்திரம் மிக மேலாம்பரமானது என்று சதேகமறச் சொல்லலாம்.''

*- மிஸ்டர் ஒகன்ஸ் (தமது நூலின் 6 -ஆம் பக்கத்தில்)*

‘‘இஸ்லாத்தின் சட்டங்கள் மிகவும் உன்னதமான நீதி கட்டளைகள் அடங்கியதாகக் காணப்படுகின்றது. அச்சட்டங் களை வழக்கத்திற்குக் கொண்டு வந்து சித்திபெறச் செய்திருப்பது எல்லாவற்றைவிட ஆச்சரியப்படத் தக்கது.''

*-எர்பாட் என்ற சட்ட நிபுணர் (‘முஹம்மதியா மகத்தவம் ’- நூல்)*

‘‘பூரணமான சமத்துவமும், சகோதர மனப்பான்மையும் முஸ்லிம்களிடையே திகழவேண்டும் -என்ற உண்மையைத் தம் வாழ்க்கை வாயிலாக முஹம்மது மெய்ப்பித்து விட்டார். அங்கு வேறுபாடு இல்லை. சாதி வேற்றுமை இல்லை; கொள்கை வேற்றுமையில்லை; வர்ணவேறுபாடு இல்லை.''

*- சுவாமி விவேகானந்தர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடைத்தெருக்களில் 'அலையாதீர்' என்பது நபிகள் நாயகத்தின் வாக்கு, இன்றைய மதுபான அலங்காரக் கடைத் தெருக்களின் கவர்ச்சிகளைக் காணும்போதுதான் அண்ணலாரின் ஆய்வுரை எம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது."

*- பூமிதான இயக்கத்தலைவர் வினோபாஜி*

"பிறப்பால் உயர்வு தாழ்வு போக்கி, மனிதனை மனிதனாக வாழச் செய்தவர் முகம்மது நபி."

*- டாக்டர் அம்பேத்கர்*

"என் இதயத்துள் பக்தியையும் விசுவாசத்தையும் நன்மதிப்பையும் பதியும்படிசெய்தது,முஹம்மது நபி (ஸல்) அவர்களை மிகவும் மூர்க்கர்களாயிருந்த அறேபியர்கள் ஒருமித்த மனத்தினராய் 'அல் அமீன்' ( நம்பிக்கைக்குரியவர்) என்று போற்றியதேயாகும். திரு லாலா லால்சந்த, வட்சுமணபுரி பண்டிதர் பிரபுதாஸர், லாலா தில்லுராம் கௌரி. டில்லி பண்டிதர் கணேசலால் கஸ்தமஸார்ஸ, மகாராஜா ஸர் கிருஷ்ணபிரசாத் (ஹைதராபாத் மந்திரி சபையின் தலைவர்) முதலிய பல மேதாவிகளெல்லாரும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது புகழ்பாடியிருப்பது நீங்களும் அறிந்திருக்கக் கூடும்."

*- டாக்டர் அன்னி பெஸன்ட்*

"அறேபிய நாட்டில் தோன்றி ஆண்டவன் ஒருவன் என்னும் மரபினை வாழச் செய்த முஹம்மது நபியே போற்றி! தரையினில் பொதுமை மங்கச் சகோதர நேயம் ஓங்கக்கரவிலா மறையைத் தந்த கருணையே போற்றி! போற்றி!"

*- தமிழ்த் தென்றல் திரு.வி.க*



"உலகில் தோன்றிய திருத்தூதர்களுள் முஹம்மது நபி அவர்களே மிகவும் பெரியவர். அவர் போதித்த மார்க்கத்தின் அடிப்படையே சமத்துவமாக மிளிர்கிறது"

*- கவியோகி சுத்தானந்த பாரதியார்*

"நபிகள் நாயகம் இவ்வுலகில் தோன்றியிருக்காவிட்டால் ஒரே இறைவணக்கம் என்ற நந்தா விளக்கே இவ்வுகில் இல்லாது ஒழிந்திருக்கும்."

*- ராஜாராம் மோகன் ராய்*

"நபிகள் நாயகத்திடம் நான் மிக மரியாதை கொண்டுள்ளேன் என்பதை வெளியிடுதலில் எனக்கு ஒருவித தயக்கமும் கிடையாது. மதாச்சாரியார்களுள் அம்மஹான் மிக உன்னத ஸ்தானம் பெற்றுள்ளார்கள் என்பது என் அபிப்பிராயம்."

*- லாலா லஜ்பதிராய்*

"உலக மதங்கள் பலவற்றையும் நான் நீண்ட நாட்களாகவே ஆராய்ச்சி செய்து வருகிறேன். முஹம்மது நபி (ஸல்) அவர்களின் போதனைகளின் விசேஷ குணங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அப்போதனைகளை இஸ்லாம் என்ற ஒரே வார்த்தையில் தொகுத்துக் கூறலாம்."

*- திரு. சி.ஜீன ராஜ தாஸா*

*(மேனாள் பிரம்மஞான சங்கத் தலைவர்)*

"நபிகள் நாயகம் (ஸல்) மட்டுமல்லாது. அவர்களோடு, அவர்களுக்கு முன்னதாக மனித குலத்தை இறைவழி நடத்த வல்ல அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட முதல் மனிதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நபியுமான ஆதம் (அலை) முதல் கொண்டு மூஸா (அலை), ஈஸா(அலை) உட்பட ஒரு லட்சத்து 24 ஆயிரம் நபிமார்களையும், அவர்களுக்கு இறைவனால் அருளப்பட்ட அனைத்து வேதங்களையும் ஒப்புக்கொண்டால் மட்டுமே அவர் முழுமையான முஸ்லிமாக ஆக முடியும் என்பது தான் அண்ணலார் (ஸல்) அவர்களின் வாக்கு - இஸ்லாமும் உணர்த்தும் கோட்பாடுமாகும்.

*முன்னாள் மத்திய அமைச்சர் - சி. சுப்பிரமணியம்*
*('இஸ்லாமும் -சமய நல்லிணக்கமும்' என்ற நூலில்)*

"முகமது நபி (ஸல்) மீது இறைவன் அன்பையும் அமைதியையும், கருணையையும் அருள்பாளிப்பானாக, ஏறக்குறைய பதினான்கு நூற்றாண்டுகளாக ஆழமாக உணர்வு பூர்வமாக, உள பூர்வமாக இலட்சக்கணக்கானவர்கள் இதயங்களில் மகனாருடைய பெயர் ஒலித்துக் கொண்டிருக் கிறது. இவர் மனித குலம் அனைத்திற்கும் மாபெரும் தீர்க்கதரிசியாக இருந்தார்."

*- நீதிபதி எஸ். மோகன்*

"உண்மையில் ஹஸரத் முஹம்மத் நபிகள் நாயகம் (ஸல்) ஒரு சிறந்த மதத் தலைவராகவும், ஒப்பற்ற அரசராகவும், சமூகப் பெரியாராகவும், யுத்த வீரராகவும், சாந்த சொருபீயாகவும், குதிரைச் சுவாரியில் சிறந்த வீரராகவும், சத்தியாக்கிரஹியாகவும் எல்லாத் துறைகளிலும் நிகரற்ற பெரியாராகவும் வாழ்ந்திருக்கிறார்கள்.

*- லாலா அமர்சந்த்*

"நபி பெருமானின் வாழ்க்கை வரலாற்றில் எனது



உள்ளத்தைக் கவர்வது யாதெனில், அவரிடம் காணப்பட்ட உண்மையும், அவரது சகோதர வாழ்க்கையுமேயாகும். மக்களால் நிகரற்ற செல்வாக்குப் பெற்றிருந்தும்கூட, அவர்தம் மரணம் சமீபிப்பதாக உணர்ந்த சமயத்தில், (தம் தோழர்களிடம்) 'உங்களில் எவருக்கேனும் நான் ஏதேனும் தீங்கு செய்திருப்பேனாயின் தண்டியுங்கள்' எனக் கூறினார்."

*- ஹாக்காம் சந்தகுமார்*

"அறேபியப் பாலைப் பிரதேசத்தில் முஹம்மது நபி(ஸல்) அவதரித்தது, அறேபிய நாட்டிற்கும், இதர எல்லா நாடுகளுக்கும், அனுகூலமாகவே ஆனது. இப்பெரியாரது வாழ்க்கையில் உலகுக்குக் கிடைத்த நன்மைக்காக அறேபியா மட்டுமல்ல அகில உலகமே நன்றி செலுத்த கடமைப் பட்டுள்ளது."

*- ஹர்தே பிரகாஷ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை கிருபை இருப்பின்

மரக்காயர் பதிப்பகம்

வழங்கவுள்ள

அடுத்த நூல்

# கீர்த்திமிகு கீழையின் கல்வி முன்னோடி!

**- மானா மக்கீன்**

ஆய்வு

அரிய வரலாற்றுத் தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மகாத்மா
- மாமேரு நேரு
- பெரியார்
- பேரறிஞர்
- மகாகவி

- கவியரசி
- முத்தமிழ்க் காவலர்
- மதுரை ஆதீனம்
- நல்லியார்
- பெர்னாட்ஷா

- கார்லைல்
- வில்லியம்
- கிப்பன்
- மைக். ஹார்ட்
- மற்றும் பலர்






நாவுக்கரசன்
ஏ.ஜி.ஏ.அஹமது ரிஃபாய்
பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org